விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 22 முஹற 12 இதழ் 236
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 8-10-84

## கடலில் 'மணிமேகலை'க்கு 1 மணிநேரம் நடந்த சோதனை

(நெடுந்தீவு)
நேற்றுக்காலை ஏழு மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு பிரயாணிகளுடன் சேவையிலீடுபட்டிருந்த 'மணிமேகலை' என்ற மோட்டார் படகை கடற்படையினர் கடலில்வைத்து சோதனையிட்டனர்.

கடற்படையினர் ரோந்துப் படகுகள் மூலம் இச்சோதனையை ஒரு மணித்தியாலயம் மேற்கொண்டனர்.

'மணிமேகலை' என்ற படகைச் சோதனையிட்டபின்னர் கடற்படையினர் காரைநகரிலுள்ள தமது முகாமுக்கு பிரயாணிகளுடன் எடுத்துச்சென்

[5ம் பக்கம் பார்க்க]

## கடற்படையிலும் 'ருகிங்' 7 பேர் பதவி நீக்கம்!

(கொழும்பு)
கடற்படையிலும் புதிதாகச் சேர்ந்து கொள்வோர் மீது 'ருகிங்' நடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக ஏழு கனிஷ்ட கடற்படை அதிகாரிகள் பதவி நீக்

[8ம் பக்கம் பார்க்க]

# பேச்சுவார்த்தையில் பயனில்லை: விரைவில் சட்டமறுப்பு இயக்கம்!

## கூட்டணி தொகுதிக்கிளை ஒருமனதாக முடிவு!

(கா. யோகநாதன்)

மகாநாடு எதற்கும் இனிமேல் போகக்கூடாதென்றும், விரைவில் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும் என்றும் திருநெல்வேலியிலுள்ள தமிழர்விடுதலைக்கூட்டணி தலைமைக்காரியாலயத்தில் நேற்று மாலை நடந்த நல்லூர்த் தொகுதி கூட்டணிக் கிளை உறுப்பினர்களின் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை சென்னையில் நடைபெறவிருக்கும், கூட்டணி அரசியல் குழுவில் சமர்ப்பிப்பதாகத் தலைவர் தெரிவித்தார். திரு சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: ''மாநாட்டிற்கு போவதில்லை என்று கூட்டணி முடிவுஎடுத்த பின்பு. வெளிநாடுகளில் அடுத்த நடவடிக்கைபற்றி விரிவாக பிரசாரத்தை மேற்கொள்ளவேண்டும். சென்னையில் அரசியல்குழு கூடி இறுதி முடிவு எடுக்கும்.

(5ம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி: முல்லைத்தீவு ரத்து! கண்டியில் ஏற்பாடு!!

(கிளிநொச்சி)
முல்லைத்தீவில் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த அகில இலங்கைரீதியிலான தமிழ்த்தினப் போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளது

இதற்குப்பதிலாக கண்டியில் பிரஸ்தாப போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது

கண்டியில் தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறுவது குறித்து தமிழராசிரியர் சங்கம் மற்றும் மாணவர் அமைப்புக்களும், பெற்றோர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## கடத்தப்பட்ட 3 வாகனங்கள் கொழும்பு விற்பனை நிலையத்திலிருந்து மீட்கப்பட்டன!

(கிளிநொச்சி)
புங்குடுதீவு 'ரோஸா' மினி பஸ், சாவகச்சேரியில் கடத்தப்பட்ட 'டெலிக்கா' வான், கிளிநொச்சி திருவையாற்றில்கடத்தப்பட்ட 'டெலிக்கா வான் ஆகிய மூன்று வாகனங்களையும் கொழும்பிலுள்ள இரண்டு பிரபலவாகனவிற்பனை நிலையங்களிலிருந்து கிளிநொச்சி பொலிசார் மீட்டுள்ளனர்.

இந்த வாகனங்கள் அதன் இலக்கத்தகடுகள் அகற்றப்பட்ட நிலையில் விற்பனைக்கு விடப்பட்டிருந்தபோதே பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களிலிருந்த ஆடம்பரப் பொருள்கள் கழற்றப்பட்டிருந்தன. வாகனங்களை பொலிசார் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக வட்டக்கச்சியைச் சேர்ந்தவரும், தற்போது கொழும்பு ஆமர்வீதியில் வசிப்பருமான பிலிப் ஆசீர்வாதம் அல்லது மணியம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பாக மேலும் பலர் கைதுசெய்யப்படலாமென்று பொலிசார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மாணவரின் 3-ம் கட்ட உண்ணாவிரதம்: பரவலாக நடத்தத் திட்டம்

[கரவெட்டி]
வடமராட்சி மாணவர்களின் மூன்றும் கட்ட உண்ணாவிரதம் நேற்றுக் காலை எட்டு மணியளவில் கரவெட்டி புனிதஅந்தோனியார் ஆலய முன்றலில் ஆரம்பமானது.

இதன் முதலிரு கட்டங்களும் மும்மூன்று தினங்களாக புலோலி புனித சூசையப்பர் ஆலயமுன்றலில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

நேற்றுநடைபெற்ற உண்ணாவிரதத்தில் நூற்றுக்குமதிக

(5-ம் பக்கம பார்க்க)

## அதிர்ஷ்டம் உண்டா?

(கொழும்பு)
நேற்று இழுக்கப்பட்ட 978 வது இலக்க தேசிய லொத்தர் சபை சுவீப்பில் முதல் மூன்று பரிசுகள் பெறும் டிக்கட்டுகள் வருமாறு:

1-வது பரிசு:
11 A 0583
2-வது பரிசு:
13 Z 0942
3-வது பரிசு:
02 E 0429

## சோவியத், பல்கேரிய விமானச்சேவை பிரதிநிதிகள் வெளியேற்ற பட்டனர்!

(கொழும்பு)
சோவியத் 'ஏரோபுளொட்' விமானச்சேவை, பல்கேரியாவின் 'பல்கன்' விமானச் சேவை ஆகியவற்றின் இலங்கைக்கான பிரதிநிதிகளை அரசாங்கம் நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது!

'ஏரோ புளொட்' பிரதிநிதி ஏற்கனவே நாட்டிலிருந்து சென்றுவிட்டார் அவரை வெளியேறக்கோரியதற்கான காரணங்களை இலங்கை அரசு வெளியிடவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் பணிப்பின்பேரிலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்

[5ம் பக்கம் பார்க்க]

## தரையில் வாழும் மீன்கள்!

(மட்டுவில்)
மாமுனை, தாளையடி, செம்பியன்பற்று பகுதிவாழ்மீனவர் குடும்பங்கள் பதற்றநிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்

தொழிலைக் கைவிட்டு இவர்கள் இரவில் காடுகளிலும், பகலில் வீடுகளிலுமே வாழ்க்கை நடத்துகிறார்கள்!

கடந்த சில தினங்களில் இரவு நேரத்தில் சுமார் பத்து மணியளவில் தொடர்ந்து பல மணிநேரம் கடற்கரைப் பகுதிகளில் பீரங்கித்தாக்குதல்கள் நடக்கிறதாம் இதனால் நிறைமாத கர்ப்பிணிகள், பிரசவத்தாய்மார்கள் கூட சுமார் 2,3 மைல் தொலைவிற்கப்பால் உள்ள காடுகளில் இரவில் பதுங்கிவாழ்கிறார்களாம். பகலில் வீடுதிரும்பியதும் வீட்டு சுவர்களிலும், மரங்களிலும், தரையிலும் பீரங்கிக் குண்டுகளின் எதிரொலி காணப்படுகிறதாம்.

## இலங்கையில் கொள்முதல் செய்து இலங்கையிலேயே நடக்கும் விற்பனை!

[மன்னார்]
கொழும்பு சுங்கத்தீர்வையற்ற கடைகளில் கொள்முதல் செய்யும் பொருட்களை இலங்கையிலேயே விற்பனைசெய்யும் இந்திய உல்லாசப் பயணிகளின் தொகை அதிகரித்துவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது!

கொழும்பு சுங்கத்தீர்வையற்ற கடைகளில் கொள்முதல்செய்து பெறுமதிமிக்க வெளிநாட்டுப் பொருட்களை இலங்கையிலேயே விற்பனைசெய்துவிட்டு கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குத் திரும்புவதற்காக தலைமன்னார்துறைக்கு வந்த 25 இந்திய உல்லாசப்பயணிகளை தலைமன்னார்துறை சுங்க அதிகாரிகள் கடந்த செவ்வாய்கிழமை தடுத்து வைத்து விசாரணை நடத்தினர்

விசாரணையின்போது சுங்கத்தீர்வையற்ற கடையில் கொள்முதல்செய்த வெளிநாட்டுப் பொருளை இலங்கையிலேயே விற்பனை

(5-ம் பக்கம் பார்க்க)

## வழமைக்குத் திரும்புகிறது

(புலோலி)
நேற்றுக் காலை பருத்தித்துறை பஸ் டிப்போவில் 'கிரகப்பிரவேசம்' நடைபெற்றது

வழமையான சமயச்சடங்குகளுடன், பொங்கல் படைத்து ஊழியர்கள் தமது கடமையை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை டிப்போவுடன் காரநகர் டிப்போவும் இன்றுமுதல் தனது வழமையான கடமைகளை மேற்கொள்கிறது. (கெ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னுகம் கந்தரோடை ரோட்டில் முப்பது பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: தி. திருச்சிற்றம்பலம், தரைமன் கலட்டி, ஆனைக்குட்டி லேன். தெல்லிப்பழை. (124)

17A மணல்தரை லேன், கந்தர்மடத்தில் 1¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. கிணறுப் பங்கு, திருநெல்வேலி சிவன் கோவில் ரோட், மணல்தரை லேன், இரு பக்கத்தாலும் ஒழுங்கை உண்டு. நவா எம்போறியம் 16, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 119

அரியாலை பூதாதே கோவிலுக்கு அருகாமையில் 2 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ளவும். L. இம்மானுவேல். 43, மாட்டின் ரோட், யாழ்ப்பாணம். (130)

## தேவை

பிடவை வியாபாரத்தில் நல்ல அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை, சீமாட்டி, 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (120)

பிரயாணப் பைகள் (ரவலிங் பேக்) தைப்பதில் அனுபவம் வாய்ந்த பெண்களும், தையல் வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்களும் உடன் முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 128, C/o ஈழநாடு. (128)

## வியாபாரம் செய்க விளம்பரம் பெருக

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை, (புலோலி) என்பவரின் மரணசாதனத்தின் / மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சரஸ்வதி, புலோலி தெற்கு, புலோலி.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல.1210/T

எதிர்

1. சிதம்பரப்பிள்ளை தங்கராசா,
2. சிதம்பரப்பிள்ளை தங்கத்துரை,
3. சிதம்பரப்பிள்ளை தங்கயோகன்,
4. சிதம்பாப்பிள்ளை மகள் தங்கரத்தினம்
5. சிதம்பரப்பிள்ளை மகள் தங்கேஸ்வரி,
6. சிதம்பரப்பிள்ளை தங்கேஸ்வரன் எல்லோரும் புலோலி தெற்கு, புலோலி.

— எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தைஎண்பிப்பதற்காக/மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ஆந் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**றிச்சேட் ஜெயராசசிங்கம்.**
ஒப்பம்
பதிவாளர்

ஆக்கம்;
இராமசுவாமி சதானந்தன்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
புலோலி தெற்கு, புலோலி.
10

## 1-வது ஆண்டு
# நி னை வ ஞ் ச லி
## செல்வி விமலாதேவி (சிவா) இராமலிங்கம்

தோற்றம்: 09 | 10 | 1955



மறைவு: 23 | 09 | 1983

எங்கள் அன்பின் சிவா!

யாவரையும் ஆறுத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயரத் துன்பக்கடலில் மூழ்கடித்துவிட்டு காலன் உன்னைக் கவர்ந்துவிட்டான்.

சிவா! சிவா! என நித்தம் அழைத்த குரலுக்கு குரல் கேட்டு ஓடிவருவாயே?

இன்முகத்தை இனி எங்கே காண்போம்.

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும் உமது நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது.

நினது ஆத்மா சாந்தியடைய அன்றுடம் பிரார்த்திக்கும்

**தந்தை, தாய், சகோதர சகோதரிகள்.**

கல்லூரி வீதி, கொக்குவில். (95)

# காங்கேசன்துறைக்கு கப்பல்கள் வருவதில் தாமதமும், தடையும்!
## துறைமுகத் தொழிலாளர் கஷ்டம்!!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்குப் பொருட்களை ஏற்றிவரும் கப்பல்களின் வருகையில் தாமதமும், சிலசமயங்களில் தடையும் ஏற்படுவதால் துறைமுக வேலையை நம்பிவாழும் பெருந்தொகையான தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் துறைமுகம் அமைக்கப்பட்ட பின்னர் காங்கேசன்துறைக்கு அடிக்கடி கப்பல்கள் வந்து கொண்டிருந்தன. வடபகுதிக்கு வேண்டிய உணவுப் பொருட்களும், சிமெந்து ஆலைக்குத் தேவையான நிலக்கரி, ஜிப்சம் ஆகியனவும் இக்கப்பல்களில் கொண்டுவரப்பட்டன.

ஆனல் அண்மைக்காலமாகக் கப்பல்கள் க்ரமமாக இங்கு வந்து பொருட்களை இறக்கிச் செல்லமுடியாத சூழ்நிலைநிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜிப்சம் ஏற்றிவந்த இந்தியக்கப்பல் ஒன்று அசுனை இறக்காமலேயே திரும்பிச் சென்றது. பின்னர் மாக்கப்பல் ஒன்று வந்து துறைமுகப் பகுதிக்குள் வரத் தடை விதிக்கப்பட்டதால் சில தினங்கள் துறைமுகத்திற்கு வெளியே தரித்துநின்று பின்னர் ஒருவாறு அனுமதிபெற்று மா இறக்கப்பட்டது.

இந்தவாரம் ஜிப்சத்தை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வருமென எதிர்பார்க்கப்பட்டு இறக்குமதி வேலைகளுக்கான துரித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டபோதும் அந்தக் கப்பல் வருமா என்பதுபற்றி இன்னமும்சரியாகக் கூறமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல்பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலை காரணமாகக் கப்பல்களின் வருகையில் தாமதமும், சில சமயம் தடையும் ஏற்படுவதால் துறைமுகவேலையில் ஈடுபடும் தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வறுமை நிலைக்குத்தள்ளப்பட்டு வருவதாகவும், இந்நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்துக் கப்பல்கள் ஒழுங்காக வந்துசேர ஆவன செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

## இசைக்கல்லூரி பூரணமானதாக இல்லை!

(மட்டக்களப்பு)

''மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி பூரணத்துவமான கல்லூரியாக இயங்குவதில்லை. இந்நிலையில் மாணவிகள் பல சிரமங்களை அடைகிருர்கள்.''

இவ்வாறு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரேதேச சபைக் கூட்டத்தில் உரையாற்றிய புளியந்தீவு கிராமோதய சபைத் தலைவர் திரு. ம. சிவநேசராசா புகார் தெரிவித்தார்.

சபையின் தலைவர் திரு, ரி. இராஜேஸ்வரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## 'இராசு' நிராகரிக்கவில்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வருடம் புனரமைப்புச் செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் எதையும் தொகுதி எம். பி.யான பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை நிராகரிக்கவில்லை.

கிராம அபிவிருத்தி அமைச்சின் உத்தரவின் பிரகாரம் புனரமைப்புச் செய்யப்படும், புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்படும். கிராம அபிவிருத்தி, மாதர் சங்கங்கள் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் அங்கீகாரம் பெறவேண்டும்.

இதன்பிரகாரம் மட்டக்களப்புத் தொகுதியில் 85 சங்கங்கள் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டு எம். பி.யால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## சரியானபெயர் வயாவிளான்

(கொழும்புத்துறை)

வசாவிளான் என்று அழைக்கப்படுவதை வயாவிளான் என்று திருத்திப் பாவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வயாவிளான் என்ற ஊரின் பெயர் வசாவிளான் என்று பிழையாகவே அழைக்கப்பட்டு வருகின்றது என்றும், இவ்வூர் மக்களின் குறைபாட்டைப் போக்குமாறும் வயாவிளான் கிராமசேவை அலுவலர் திரு. யோ அருளானந்தம் உரிய அதிகாரிகளை மகஜர்கள் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே, தபால் திணைக்களம் வயாவிளான் என்ற சரியான பெயரைப் பாவிப்பது என்று முடிவு செய்திருந்தும் இதுவரையும் நடைமுறைப் படுத்தப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

# இந்திய கிரிக்கெட் குழு பாகிஸ்தான் புறப்பட்டது!

[பம்பாய்]

சுனில் கவாஸ்கர் தலைமையிலான 16 பேர் கொண்ட இந்தியகிரிக்கெட் கோஷ்டி நேற்றுப் பம்பாயில் இருந்து பாகிஸ்தானுக்குப் புறப்பட்டது.

இந்தக் கோஷ்டி பாகிஸ்தானில் 3 டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும், மற்றும் இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ளும் இக்குழு ஒருமாத காலம் அங்கு தங்கியிருக்கும்.

## உடுத்துறை, ஆழியவளையில்
# பீரங்கி வேட்டுக்கள்: மக்கள் பீதி!

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கில் உள்ள கிராமங்களின் மீது கடந்த சிலதினங்களாக கடலிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வருவதையடுத்து அப்பகுதிமக்கள் பீதியடைந்துள்ளனர்.

உடுத்துறை, ஆழியவளை கிராமங்களின் மீது பிரயோகிக்கப்பட்ட பீரங்கி வேட்டுக்களையடுத்து கடற்கரைப் பகுதியிலுள்ள தென்னைமரங்களின் வட்டுக்கள் சரிந்துள்ளன.

இரவு நேரங்களில் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும்போது மக்கள் பீதியினுல் வீட்டைவிட்டு குழந்தைகளுடன் வெளியே ஓடுவதாகக் கூறப்படுகிறது.

# வடபகுதியில் வெங்காய விலை வீழ்ச்சி

(பச்சிலைப்பள்ளி)

வட பகுதியில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ஒரு கிலோ சின்னவெங்காயம் தற்போது 14 ரூபாவாக சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. பம்பாய் வெங்காயம் 1 கிலோ 9 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது உள்ளூர் வெங்காயங்கள் சந்தைக்கு வந்ததையடுத்தே வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

# கசிப்பு உற்பத்தியை தடுக்க நடவடிக்கை

[மன்னூர்]

மன்னூர் மாவட்டத்தில் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தியையும், அதன் விற்பனையையும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இளைஞர்கள் குழுக்கள் பரவலாக மேற்கொண்டு வருகின்றன.

இக்குழுக்கள் கசிப்பு உற்பத்தி செய்பவர்களின் வீடுகளுக்கும் நேரில்சென்று கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்து வருகின்றன.

மன்னூர் மாவட்டத்தின் சில பகுதிகளில் கசிப்பு உற்பத்தி விற்பனை ஆகியவற்றைக் கண்டித்து சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

## 'சிறுவர் கதைவேளை'

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபையினல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ''சிறுவர் கதைவேளை'' என்னும் சிறுவர்கள் நிகழ்ச்சி நகரின் பலபாகங்களிலும் நடைபெற்று வருகின்றது.

இத்தகவலை இந்நிகழ்ச்சி தயாரிப்பாளரான மாஸ்டர் சிவலிங்கம் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

# "உலக அமைதியில் அமெரிக்காவுக்கு அக்கறை இல்லை!"

## கிழக்கு ஜெர்மனில் குரோமிக்கோ உரை!

பெர்லின், அக். 7

"உலக அமைதியை ஏற்படுத்துவதில் அமெரிக்காவுக்கு அக்கறையில்லை. இராணுவவலுப் பெறுவதே அதன் முக்கிய நோக்கம்" என்று சோவியத் வெளிநாட்டு அமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோ தெரிவித்தார்.

கிழக்கு ஜெர்மனில் பெர்லின் நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே திரு குரோமிக்கோ மேற்கண்டவாறு கூறினார். திரு. குரோமிக்கோவின் இப்பேச்சு அண்மையில் அவரின் அமெரிக்க சுற்றுப்பயண விபரங்களை உள்ளடக்கியிருந்தது.

திரு. குரோமிக்கோ மேலும் தெரிவித்ததாவது:- "அமெரிக்காவுக்கு உலக அமைதியை ஏற்படுத்துவதில் அக்கறை இல்லை. மிகப் பெரும் இராணுவ பலத்தைக் கட்டியெழுப்புவதிலேயே அது ஈடுபட்டு வருகின்றது. தனது இந்த முயற்சியை மூடிமறைக்கும் வகையிலேயே ஆயுதப் பரிகரணப் பேச்சுக்கள் நடத்தத் தயாராவது போலவும், அவற்றில் தனக்கு அக்கறை இருப்பதுபோலவும் பாசாங்குசெய்கின்றது. ஆனால் உண்மையில் இராணுவ பலத்தைக் கூட்டும் வகையில் காலந் தாழ்த்தியே ராஜ்ய உத்திகளை அது கையாண்டு வருகின்றது

ஆயுதப் பரிகரண நடவடிக்கைகளில் தனக்கிருக்கும் ஆர்வத்தை அமெரிக்கா வெளிப்படையாகத் தெரிவித்தால் சோவியத் யூனியன் பகிரங்கமாக, கண்ணியத்துடன் சமரசப் பேச்சுக்களை நடத்த முன்வரும்" என்றார்.

இதேவேளை சோவியத் வெளிவிவகார அமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோ அமெரிக்கத் தலைவர்களுடனும், ஐ.ந.விலும் நிகழ்த்திய பேச்சுக்கள் குறித்து கிரெம்ளின் ஆட்சிப் பீடம் அவரை வெகுவாகப் பாராட்டியுள்ளது.

திரு. குரோமிக்கோவின் அமெரிக்கப் பயணம் பற்றிய சோவியத்தின் அறிக்கையில், அமெரிக்காவுடன் எதிர்காலத்தில் சோவியத் பேச்சுக்களை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கி)

## தட்டுப்பாடு நீங்கியது

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் மலேரியா நோய் இரத்தப் பரிசோதனைக்கு மிகவும் அவசியமான கண்ணாடி சிலேட்டுகளுக்கு கடந்த மூன்று மாத காலமாக நிலவிவந்த தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளது.

யாழ். பிரதேச மலேரியாத் தடுப்பு இயக்க வைத்திய அதி

( ·ம் பக்கம் பார்க்க)

## ★ சுவிஸ்ஸில் உள்ள இலங்கைத் தமிழரை திருப்பி அனுப்பவேண்டாம்!

### சுவிஸ் புதுடில்லி தூதரகத்திற்கு ஜனார்த்தனன் தந்தி

சென்னை, அக் 7

'சுவிற்சர்லாந்தில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களை சுவிஸ் அரசாங்கம் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது' என்று தமிழக சட்ட மேலவை உறுப்பினர் இரா ஜனார்த்தனன் கேட்டுள்ளார்.

திரு ஜனார்த்தனன் தமது இக்கோரிக்கையைத் தந்தி ஒன்றின் மூலமாகப் புதுடில்லியிலுள்ள சுவிற்சர்லாந்து தூதரகத்திற்கு விடுத்துள்ளார்.

150 இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பிஅனுப்ப சுவிஸ் அரசாங்கம் எடுத்த முடிவு வாபஸ்பெறப்படவேண்டும். அரசியல் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள்.

கடந்த ஆண்டு 200 தமிழ் இளைஞர்கள் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலிருந்து இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டார்கள். அவ்விளைஞர்கள் கொழும்பில் ஜெர்மன் அரசின் பிரதிநிதிகளுக்கு முன்பாகவே கைதுசெய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள் என்றும் திரு ஜனார்த்தனன் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார். [கி]

## அமெரிக்காவிடம் இஸ்ரேல் பொருளாதார உதவி கோருகிறது!

### யூத சமூகத்தையும் எதிர்பார்த்து இஸ்ரேல் பிரதமர் யூ. எஸ். பயணம்!

ரெல்அவிவ், அக். 7

இஸ்ரேலில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் மக்களின் தேவைகளைச் சமாளிக்கமுடியாமல் இருக்கின்றது.

இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு. சிமோன்பெரஸ், நிதி உதவி கோரி அமெரிக்காவுக்கு செல்லவுள்ளார். இவர் அங்கு அமெரிக்க அரசாங்கத்திடமும் அங்குள்ள செல்வந்த யூத சமூகத்திடமும் இஸ்ரேலுக்கு நிதியுதவி கோருவர் என்று கூறப்பட்டது.

அமெரிக்கா கடந்தகாலங்களில் இராணுவரீதியாகவே பெருமளவில் இஸ்ரேலுக்கு உதவியளித்தது. தற்போது இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள நிலைமை இங்கு சகல அரசு நடவடிக்கைகளையும் முடங்கச் செய்துள்ளது. எனவே பொருளாதாரரீதியாக இஸ்ரேல் அமெரிக்காவிடம் தற்போது உதவியை எதிர்பார்க்கின்றது.

அமெரிக்காவில் இஸ்ரேலிய யூத சமூகத்தவர்களே பெரும் செல்வந்தர்களாக நிதிவிடயங்களில் ஆதிக்கம்செலுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது (கி)

## ஹைதராபாத் வீதிகளில் பொலிஸார் உறக்கம்!

ஹைதராபாத் அக். 7

ஹைதராபாத் நகர பொலிஸார் பலர் கடந்த வாரம் அந்நகரின் பிரதான வீதிகளின் நடைபபாதைகளில் விடியற்காலை வேளை படுத்துறங்கிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது!

இக்காட்சியை வீதியில் சென்ற பாதசாரிகள் பலர் மிகுந்த அனுதாபத்துடன் பார்த்துச் சென்றனர்.

கடந்த வாரம் ஆந்திராவின் ஹைதராபாத் நகரில் கலவரங்கள் இடம்பெற்றன. இவற்றை அடக்குவதற்கு பொலிஸார் இரவு பகலாக அந்நகர்ப் பகுதியில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

கண்ணயர முடியாது தமது கடமையை முடித்தபின்னரே அவர்கள் தாம் சேவையிலீடுபட்ட வீதிகளின் நடைப்பாதைகளில் தம்மை மறந்து உறங்கிவிட்டனர்.

விடியற்காலை வேளை சீருடை, சப்பாத்து, தொப்பிகளை அணிந்தபடி கையில் தடி, குண்டாந்தடி மற்றும் தற்காப்புச் சாதனங்களுடன் அந்த பொலிஸார் நன்கு குறட்டைவிட்டுத் தூங்கியதை பலர் அடக்க முடியாத சிரிப்புடன்—அதே வேளை அனுதாபத்துடன் பார்த்துச் சென்றனர். (கி)

## குடிநீர் விநியோகத் திட்ட வேலைகள்

[மட்டுவில்]

சாவகச்சேரி குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் தொடர்ந்து சுறுசுறுப்பாக நடைபெறுகிறது.

1985ம் ஜூலை மாதத்திற்குள் எப்படியும் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் திட்டப் பொறுப்பதிகாரிகள் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறார்கள்.

மீசாலையில் சாவகச்சேரி நகருக்கான குடிதண்ணீர் சேகரிப்பு தண்ணீர்த் தாங்கிகளின் வேலைகளும் ஆரம்பமாகியுள்ளன.

## இரவில் நடக்கும் குண்டுவீச்சுத் தாக்குதல் வீடுகளில் இருக்க மக்கள் அச்சம்!

(கொழும்புத்துறை)

செம்பியன் பற்று, தாளையடி, உடுத்துறை, கொடுக்குளாய்ப்பகுதிகளில் கடலிலிருந்து கடந்த சில தினங்களாகக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் இப்பகுதிப் பொதுமக்கள் இரவில் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்லுகின்றனர்.

இப் குதிக் கடலில் தினமும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வருகின்றனவாம். இக்குண்டுகள் மெதுவான சத்தத்துடன் தீப்பிழம்புகளாகக் கடலிலிருந்து குடியிருப்புக்களை நோக்கி வருகின்றனவாம்

இக்குண்டு வீச்சுத் தாக்குதல்களால் செம்பியன்பற்று, உடுத்துறைப் பகுதிகளிலுள்ள பல தென்னந் தோட்டங்கள் நாசமடைந்துள்ளன. இத் தென்னந் தோட்டங்களில் தென்னை மரங்கள் எரிந்தும், முறிந்து வீழ்ந்த நிலையிலும் காணப்படுகின்றன செம்பியன பற்றிலுள்ள வீடொன்றும் கடலில் இருந்து வந்த குண்டினால் தாக்குண்டதால் அவ்வீட்டுக் கூரை பலத்த சேதமடைந்தது

தொடர்ந்து நிகழும் இக் குண்டு வீச்சுச்சம்பவங்களினால் கடற்கரைப் பகுதிகளில் வாழும்மக்கள் பீதியினால் இரவு வேளைகளில் பாதுகாப்பான வேறிடங்களுக்குச் சென்றே தங்கி வருகின்றனர்.

கடலில் மீன்பிடி வலைகளும் அறுக்கப்பட்டுச்சேதப்படுத்தப்பட்டு வருவதாகவும் இதனால் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சல்ல அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## "தாவர உணவினால் மனிதாபிமானம் நன்கு பெருக்கமடைகிறது!"

### ருக்மணிதேவி அருண்டேல் கூறுகிறார்

சென்னை, அக் 7

"தாவர உணவுகளை உண்பதால் மனிதாபிமான உணர்வுகள் பெருக்கமடைகின்றன" என்று பிரபல இந்தியப் பிரமுகரும் பழம்பெரும் நாட்டியக் கலைஞருமான திருமதி ருக்மணிதேவி அருண்டேல் தெரிவித்தார்

நேற்று சென்னையில் 'உலக தாவர உணவு தினம்' கொண்டாடப்பட்டது இவ்வைபவத்தின் போதே சென்னை தாவர உணவுச் சங்கத் தலைவியான திருமதி ருக்மணிதேவி அருண்டேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது.- 'சகல உயிர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் இத்தகையசமத்துவ உணர்வை தாவர உணவுகள் மனிதர்களுக்கு ஊட்டுகின்றன

கொல்லாமையை மனிதரிடத்தில் உருவாக்குவதுடன் அன்பு நெறியையும் தாவர உணவுகள் தோற்றுவிக்கின்றன

தாவர உணவு மனிதாபிமான உணர்வுகளைப் பெருக்குவதுடன், மனிதனின் அடிப்படை உணர்ச்சிகளைக்கட்டுப்படுத்தவும்உதவுகின்றன என்றார்

திருமதி சௌந்தரா கைலாசம் உரையாற்றுகையில், காந்தியடிகளின் தெய்வீகத் தன்மைக்கு சிறுவயது முதல் அவர் மாமிசத்தை வெறுத்ததே காரணம் என்றார்

இவ்வைபவத்தில் பேசிய ஏனைய பேச்சாளர்கள் சீராக உடலை வைத்துக் கொள்ளவும் சிக்கனமாக வாழ்க்கையை நடத்தவும், மனித சமுதாயத்தை மேம்படுத்தவும் தாவர உணவுப் பண்டங்கள் பெரிதும் உதவுகின்றன என்று குறிப்பிட்டனர். [கி]

## யாழ். நகரில் தனியார் மருத்துவ போதனை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ் ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில், விஜயதசமியன்று 27 மாணவருக்கு மருத்துவபோதனைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக கல்லூரி இயக்குனர் திரு ஈ வி கார்த்திகேசு தெரிவித்தார்.

14 மாணவிகளுக்கும் 13 மாணவருக்கும் மருத்துவ போதனை ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார் [க]

## மணிவாக்கு

ஒரு பெரிய தவறில் கீர்த்தியுள்ளது.

—நதாலியா க்ரேன்

# நமது நோக்கு

## ஏ யாழ்ப்பாணமே! என்றுதான் உனக்கு விடிவு?

எந்தச் சமுதாயத்தில் பெரும்பாலான மககள் பிறரிடமிருந்து அதிகமாகப் பெற்று, அதேவேளையில் பிறருக்குக் கொடுக்க விரும்பாத அல்லது இயலாத நிலையில் உள்ளனரோ அந்தச் சமுதாயம் நாளடைவில் வறுமைக்கும் வீழ்ச்சிக்கும் உள்ளாகிறது. இதனைச் சரித்திரம் நமக்குப் புகட்டுகிறது.

''பொது நன்மைக்காக எங்கே கூட்டுமுயற்சி மேற்கொள்ளப்படுகிறதோ அதுவே யாகமாகும்'' என்கிறது பகவத் கீதை.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த நம் முன்னோர் பகவத் கீதையை நன்கு படித்தார்களோ நாமறியோம். கீதையைப்பற்றி அதிகம் பேசியதாக வரலாறு குறிப்பிடவில்லை; நிச்சயம் கீதையின் படி வாழ முயன்றிருக்கிறார்கள்.

நீர் வளம், நிலவளம், மலை வளம் போன்ற பல வளங்கள் வறண்ட யாழ்ப்பாணத்தில் என்றும் இருந்திருக்கவில்லை. நாம் வறுமையில் வாழ்ந்ததாகவும் சரித்திரம் சொல்கிறது; ஆனால் இந்த வறுமையை நீக்க உதவிய இரு சாதனங்கள் கல்வியும் கூட்டுறவும் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

பல தியாக புருஷர்களின் ஒற்றுமைப்பட்ட சேவையால் உயர்ந்த பல பாடசாலைகள் உடைக்கப்பட்டு, அவற்றின் பரிசோதனைக் கூடங்களும் உபகரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டுவருவதைக் கல்வியின் வீழ்ச்சியென்றே கொள்ள வேண்டும். எதற்காக இந்த அழிவு?

யாழ்ப்பாணப் பொருளாதாரத்திற்குக் கைகொடுத்துதவிய யாழ்ப்பாண வியாபாரச் சங்கம் எரிக்கப்பட்டும்; குறை உயிரில் இயங்கும்போது கொள்ளையடிக்கப்பட்டும் வருவதை என்னென்று வர்ணிக்கலாம்? ஆத்திரத்தில் ஒருவனைக் கொல்வது; அது தீர்ந்தபாடில்லையென அவனுடைய அங்கங்களைத் துண்டு போடுவது போன்றதாகும். இதுபற்றி சங்க ஊழியர்கள் எழுப்பிய அவலக்குரல் மக்கள் காதில் நன்குபதியவேண்டும்; எரிப்பதும் கொள்ளையடிப்பதும் போராடும் பகுதிகள் இருவருமே என்றால் ஸ்தாபனம்தான் பொது எதிரியோ? என்ன விபரீதம்?

இலங்கையில் யாழ்ப்பாணமே கூட்டுறவுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகப் பேசப்படுவது. கல்வியும் அவ்வாறே. நம்மிடம் இல்லாததை நாம் பிறரிடமிருந்து பெறவிரும்புவதைப் போல நம்மிடமுள்ளதையும் பிறருக்குக் கொடுக்கவேண்டும். அதுதான் நியாயம் கூட. தனி மனிதன் அல்லது ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம், மகிழ்ச்சி எல்லாம் இதில்தான் அடங்கியிருக்கிறது.

ஒருவன் உயிர்வாழ எத்தனை பேருடைய உதவி தேவைப்படுகிறது. இன்று நாம் இதனை எண்ணிப் பார்க்கவேண்டியிருக்கிறது. சமாதானத்திலும் சரி, சண்டையிலும் சரி இது ஒரேவிதமான உண்மை. விவசாயி, வியாபாரி, தொழிலாளி, போர்வீரன், ஆசிரியன்—இப்படி எத்தனையோ பேருடைய கூட்டு முயற்சியின் பலன்களை நாம், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து, முன்னேறிய மக்கள்அனுபவித்துவந்திருக்கிறோம்.

இன்று போர் நிலை என்பதை யார் மறப்பார், மறைப்பார், மறுப்பார்?

எந்தநிலையிலும் உயிர் வாழ்வுக்கு அத்தியாவசியமான சாதனங்கள் பேணப்படவேண்டும். சமுதாயத்தின் அடித்தளம் ஆட்டங்கொடுத்தால் விடுதலையென்பது கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்.

உயிரைப்பணயம்வைத்து போராடும் இளைஞர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் என்று அரசு குறி சுட்டிருக்கிறது. பிறர்வாழத் தன்னை அர்ப்பித்தவன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவன் ஆகிறான் என்கிறது தமிழ்மறை.

எங்கள் இளைஞர்கள் இன்று என்ன நிலைமையில் இருக்கிறார்கள்? உண்மையில் நீண்டகாலம் துன்புற்றிருந்து நிவாரணம் காணாது ஆயுதம்தாங்கிய கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அது எவ்வாறு அமைந்திருக்கிறது, என்ன திட்டம், நோக்கம் நிறைவேறுமா—இவற்றை நாம் ஆராயவரவில்லை; இன்று உலகறிந்தஇயக்கம் இது. பயங்கரவாதமா விடுதலை இயக்கமா? காலம் சொல்லும்.

தியாக உணர்வும் கட்டுப்பாடும் நிறைந்த இயக்கம் இதுவென்றும், தங்கள் வருங்காலத்தை நிர்ணயிக்கவே உயிரைத் துச்சமென மதிக்கின்றனர் என்ற அளவில் மக்கள் ஆதரவு உண்டென்பது நாம் சொல்லவேண்டுமா? அரசுக்குப் புரியாத புதிராதலால் இதனைப் படைபலத்தால் ஒழித்துக்கட்டலாமென்று நினைக்கின்றது.

மக்கள் ஆதரவே இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் 'குட்டி யுத்தம்' நிலைத்திருப்பதற்கு காரணமென்பது சொல்லாமலே விளங்கும். இதனை அரசு உணர்ந்தால் அடிப்படைப் பிரச்னையை எப்பவோ தீர்த்திருக்கலாம்.

இன்றும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே வதியும் தமிழ் மக்களின் ஆதரவை நம்பி, யாழ்ப்பாண மக்களைத்துவிட்டனரென்ற பத்திரிகைப்போரில் வெற்றியை எதிர்பார்க்கின்றது அரசு.

இன்றைய குழப்பநிலையைத் துர்ப்பிரயோகம் செய்யும் சுயநலவாதிகள், சமூகத்தின் எதிர்காலத்துக்கு சாபமிடும் வஞ்சகர்கள், ஒற்றுமையின்மைக்கு தூபமிடும் பச்சோந்திகள் தலையெடுப்பதானால் தமிழ் மக்களின் தலைமைப்பீடமான யாழ்ப்பாணம் உய்யும் வகை உண்டா?

## சர்வதேச லயன்ஸ்'கழகங்களின் உலகசேவைதினம் இன்று

# "சேவைசெய்வதே ஆனந்தம்"

1917-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் சிக்காகோ நாட்டைச் சேர்ந்த மெல்வின் ஜோன்ஸ் என்ற பெரியார் கண்ட கனவு நனவாகியதன் பிரகாரம் 12 அங்கத்தவர்களை கொண்டு 'லயன்ஸ் கழகம்' என்னும் பெயரில் சேவையை உயிர்நாடியாகக் கொண்ட கழகம் ஒன்று உருவாயிற்று. இன்று இக்கழகம் சர்வதேச ரீதியாக படர்ந்து வேரூன்றி உலகிலேயே மிகப் பெரியதும் மிகவும் மும்முரமான சேவைகளைச் செய்கின்றதுமான ஓர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனமாக திகழ்கின்றது. 157 நாடுகளில் 36,500 கழகங்களையும் 1,350,000 அங்கத்தவர்களையும் கொண்டதாக கொடிகட்டிப் பறக்கின்ற நிலையிலே சர்வதேச லயன்ஸ் கழகங்கள் இன்று சேவையில் ஈடுபட்டிருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்த மட்டில் லயன்ஸ் கழகம் 27 வது ஆண்டில் வெற்றிநடை போட்டு பொது மக்கள் மத்தியிலே சேவைக்கென்றே கூடி கொண்ட ஓர் கழகமாக திகழ்ந்து நிற்கின்றது.

உலகெல்லாம் பரந்து நிற்கின்ற சர்வதேச லயன்ஸ் கழகங்களுக்கு ஒக்டோபர் எட்டாம் திகதி உலகசேவை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தில் உலகிலுள்ள லயன்ஸ் கழகங்கள், லியோ கழகங்கள், லயன்ஸ் சீமாட்டிகள் கழகங்களோடு சேவைத் திட்டங்களில் ஈடுபடுவது மட்டுமல்லாது, செய்த சேவைகளையும் நினைவு கூரும் தினமாகவும் அமைகின்றது. இத்தினம் லயன்ஸ் கழகங்கள், மற்றைய சேவைக் கழகங்களோடும், பொதுமக்களோடும் நெருங்கிய சேவை உறவுகளை வலுப்படுத்துகின்ற தினமாகவும் பேணப்படுகின்றது.

எனவே தான் இத்தினத்தை லயன்ஸ் கழகங்கள் மட்டுமல்ல சேவை மனப்பான்மையுள்ள ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சேவைத் திட்டத்தில் பங்கு பற்றி இந்நாளை நினைவு கூருவது சாலச் சிறந்ததாகும்.

இவ்வாண்டின் சர்வதேச லயன்ஸ் தலைவர் லயன் பேட் மேசன் அவர்கள் ''சேவைக் கோரிக்கைக்கு பதில் கொடுங்கள்' (Answer the call to serve) என்பதை தனது கொள்கையாக பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து, எமது 306 பி பிரிவு மாவட்ட ஆளுநர் லயன் நவா டீ குறூஸ் அவர்கள் ''லயன்ஸ் இயக்கம் மூலமாக மானிட முன்னேற்றம்'' (Human development through Lionism) என்னும கோரிக்கையை பிரஸ்தாபித்துள்ளார். இவ்வாண்டிற்கான சர்வதேச லயன்ஸ் கழகங்களுக்கான சின்னம்பூகோளத்தில் ஓர் ''சேவை மணி', இச்சேவைமணி 'நான்' 'நான்' என்று எண்ணி உறங்குகின்றவர்களையெல்லாம் எழும்ப வைத்து 'நாம்', 'நாம்' என்று எண்ணுங்கள், உறங்காது சேவை செய்யுங்கள், என புத்திபுகட்டுகின்ற சேவை பணியாகத் திகழ்கின்றது.

உண்மை, அன்பு, சேவை என்ற மூன்றையும் தன் தாரக மந்திரமாகக் கொண்ட ''லயன்ஸ்'' கழகம் மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்ற

[5ம் பக்கம்க்கபாா]



**லயன் செ. அம்பிகைபாலன்**

பிரதி மாவட்ட ஆளுநர்-சர்வதேச லயன்ஸ் கழகம்

## இணுவில் சிவகாமி அம்பாளுக்கு நாளை திருவிளக்குப்பூஜை

கல்லிலே கலைவண்ணம் கண்டவன் தமிழன்- ஆதவனுக்குப் பொங்கலிட்டு வணங்கியவர்கள் எமது மூதாதையர்கள். மழையை வருண பகவானாகக் கண்டு மகிழ்ந்து வணங்கியவர்கள் இந்துப் பெருமக்கள்!

இந்த வரிசையிலேதான் சாதாரண குத்து விளக்கை 'சும்மா' விளக்கு என்று ஒதுக்கிவிடாமல் அதற்குப் பொட்டிட்டு, பூவிட்டு, பட்டுடுத்திச் வெள்ளித்தாம்பாளத்தில் வைத்து தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, பூவகைகள், கற்பூரம், என்பன வெல்லாம் வைத்து குங்குமத்தைக் கொண்டு திருவிளக்குப் பூஜை செய்து வழிபட்டு வருகிறார்கள். இங்கு திருவிளக்கிலே எல்

(5-ம் பக்கம் பார்க்க)

## அந்தச் செய்தியில் உண்மையில்லை!

கடந்த 24-9-84 ஈழநாடு பத்திரிகையில் நல்லூர் அரசாங்கவிறகு காலையில் விறகு விற்பனையில் சீர்கேடு என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் விறகு நிறைகுறைவாக விற்கப்படுவதாகவும் நிறுவைக் கூலி ஒருரூபா அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது இதுமுற்றிலும் உண்மைக்குப்புறம்பானது.

# மக்கள் கருத்து

விறகை நிறுக்கும் பொழுது பாவனையாளர் நிறுவையை சரியாகப்பார்த்து வாங்கும் பொழுது எப்படி நிறைகுறைய முடியும்?

நிறுவைக்கூலி என்றுமே பாவனையாளர் கொடுப்பதில்லை நிறுத்தவிறகை வண்டில், லொறிகளில் ஏற்றுவதற்குக் கூலி கொடுக்கப்படுகிறது.

நிதானமாகவும் நேர்மையாகவும் பாகுபாடு அற்றமுறையில் சகலருக்கும் சமமான முறையில் நடந்து வரும் தொழிலாளர்கள் மீது அர்த்தமற்ற முறையில் பழிசுமத்துவது கவலைக்குரியது.

**நல்லூர் வாசிகள்**

[இக் கடிதத்தை 54 பேர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ளனர். ஆ-ர்]

(இன்று ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்)

## முடிவேதும் கூறுயோ?

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

முடிவேதும் கூறுயோ — கண்ணு நல்ல
முடிவேதும் கூறுயோ? (முடிவேதும்)

அனுபல்லவி

தேரேறி வருகின்றுய் செந்தமிழர் வாழுகின்ற
ஊரெல்லாம் சுற்றிஅவை உருக்குலைந்த நிலைகண்டு
(முடிவேதும்)

சரணம்

பாற்கடலில் பாம்பணையில் ஞானதுயில் துயில்வதனுல்
நூற்றுவராய் நம்தமிழர் அழிவதைநீ அறியாயோ?
ஏற்பதுவோ இவ்வடிமை இழிநிலையை எம்தமிழர்
போற்றுவதோ அன்றியுனைத் தூற்றுவதோ சொல்
ஹரியே?
(முடிவேதும்)

வல்லிப்புரப் பதியமையும் நாரணனே நாமடையும்
தொல்லைகளைக் களைந்திடவே துரிதமுடன் வாருமையா!
கொல்லவரும் முதலைதனைக் கொன்றுகரி காத்தவுனக்
கெல்லையிலா எம்மிடர்கள் ஏன்தெரிய வில்லையையா?
(முடிவேதும்)

சக்கரமும் சங்கதுவும் தாமரைதண் டாயுதமும்
பக்கமதில் புவிமாதும் பங்கயத்து லெட்சுமியுமாய்
எக்கணமும் அடியவர்தம் இடர்களையும் அருள் வடிவே!
உக்கிரமாய்ப் பொங்கியெழுந் தெங்கள்துயர் களைந்
திடுவாய்
(முடிவேதும்)

-கொற்றை கிருஷ்ணனந்தன்

## தேரேறி வருபவன்காண்

பார்த்தனுக்குச் சாரதிகாண் பாரதத்துத் தூதுவன்காண்
பாற்கடலைக் கடைந்தவன்காண் பரதனுக்கு
மூத்தோன்காண்
தீர்த்தனுக்கு மைத்துனன்காண் திரௌபதையை
காத்தவன்காண்
தீராதநோய் தீர்ப்பவன்காண் தீனதயாளன்காண்
சீர்த்திமிகு சிங்கைநகர் சினகரத்து வாழ்பவன்காண்
சிரஞ்சீவி மாருதிக்கு சிறந்தொரு பக்தன்காண்
மூர்த்திதல தீர்த்தநலம் முறையாயமைந்தவன்காண்
முத்திதரு சித்திரத்தேர் முன்னேறி வருபவன்றனே.

-ஆழ்கடலான்

பரபரப்பான சூழ்நிலையில்

# கலகலப்பாய் நடைபெற்ற ஒரு நூல் வெளியீட்டுவிழா

பத்திரிகையாளர் என்றுல் செய்திகளை எழுதுபவர்கள், இவர்களுக்கு எங்கேனும் நடந்த சம்பவத்தைப் பற்றியோ அல்லது யாரேனும் சொல்லுவதையோ மட்டும் தான் எழுதத் தெரியும்.

இப்படித்தான் சிலர் நினைக்கிருர்கள்.

இது தவறான கருத்து என்பதை நிரூபித்து வருகின்ற பத்திரிகையாளர்களில் குறிப்பிடத்தக்கவர் ராஜகோபால்.

ஆக்க இலக்கியம் முதல் வரலாற்று நூல்கள் வரை இந்தப் பத்திரிகையாளர்களால் எழுத முடியும் என்பதை நிரூபித்து வருபவர்.

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை பாய் மரக் கப்பலில் பயணம்செய்த நம்மவர்களின் வரலாற்றை அவர் ''ஈழநாடு'' வில் தொடராக எழுதிவந்த கட்டுரை தற்போது நூலுருப்பெற்று நேற்று முன்தினம் வெளியீட்டு விழாவும் நடை பெற்றது.

இந் நூலின் வெளியீட்டு விழா நல்லூர் இந்துவிடுதியில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் சிலகால இடைவெளிக்குப் பின்னர் நடைபெற்றஒரு விழா வாக மட்டுமல்ல, நல்லூர் இந்துவிடுதி அதன் திறப்பு விழாவின் பின்னர் கண்ட கலகலப்பான வைபவமாகவும் இது அமைந்திருந்தது

தற்போது யாழ்ப்பாணத்தில் வேரூன்றியுள்ள 'கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் அமைப்பு, விழாவை நடத்தியது வழக்கம் போல தினகரன் பிரதம ஆசிரியரும் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவருமான திரு இ. சிவகுருநாதன் தலைமை தாங்கினுர்.

''கலை இலக்கிய பத்திரிகை நண்பர்களின் அமைப்பின் கோரிக்கைக்காக மட்டுமல்ல ராஜகோபால் எனக்குநெருக்கமானவர் ஒருவர் என்பதனுலேயே இவ்விழாவுக்கு தலைமை தாங்க சம்மதித்தேன் என்று தலைமை உரையில் குறிப்பிட்ட திரு சிவகுருநாதன் தினகரனில் ராஜகோபால் பணியாற்றியசமயம் தமக்கு ஒரு ஆலோசகராகவும் இருந்ததைக் குறிப்பிட்டார்.

திரு சிவகுருநாதனின் பேச்சு நகைச்சுவையாகவும் அர்த்தம் நிறைந்ததாகவும் இருந்தது.

நூலை நான்விமர்சிக்கவில்லை. ஆனல் ராஜகோபால் எதை எழுதினுலும் அதைப்பாக எழுது வார் என்று ஈழநாடு ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு ஏ வி. மாணிக்கம் குறிப்பிட்டார்.

இந்த நூலைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டும்என்று யாழ் இலக்கிய வட்டச் செயலாளரான திரு யாழ்வாணன் வேண்டுகோள் விடுத்தார்.

வல்வெட்டித் துறையின் பெருமையைக் கூட்டணித் தந்தையான வல்லவை எஸ். ஞானமூர்த்தி விபரித்தார்.

ஒறேற்றர் சுப்பிரமணியம், ராஜகோபாலின் பள்ளிப் பருவத்தை ஞாபகப்படுத்தினுர். இந்நூல் அவசியம் வெளிவர வேண்டிய ஒரு நூல் என்று கூறினுர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாநகர ஆணையாளர் திரு சி.வி.கே சிவஞானம், பத்திரிகையாளர் சில கருத்துக்களை திணிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்காமல் வரலாற்றுக் குறிப்புகளை ஜனரஞ்சமாக உருவாக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

விழாவில் கலந்துகொண்ட முன்னுல் கோபாய் எம்.பி. திரு ஆ.மு ஆலாலசுந்தரம் நிகழ்த்தியஉரை பயனுள்ளதாகவும் பலரின் இதயத்தைத் தொடுவதாகவும் இருந்தது.

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை பாய்மரக்கப்பலில் நம்மவர்கள் பயணம் செய்த அந்தப்பயணத்தை இன்றைய தமிழ்மக்களின் அரசியல் பயணத்துடன் ஒப்பிட்டார் 'ஆலால்' கப்பலைக்கட்டினுல் மட்டும்போதாது மாலுமி சாஸ்திரம், வானசாஸ்திரம் என்பனவற்றையும் தெரிந்திருந்தால் தான் கரையை அடையமுடியும் என்றுகுறிப்பிட்டஅவர்,இக்கருத்தைதமிழ் மக்களின் இன்றைய பயணத்துடன் ராஜகோபால் பிணைத்திருப்பதாக தனக்கு படுவதாக கூறினுர்.

பிரபல நாவலாசிரியர் கே. டானியல் தனக்கேயுரித்தான நகைச்சுவைப் பாணியில் கனதியான கருத்துக்களைத் தெரிவித்தார்,

'மஸ்கன்ஸ் நகாராசா யாழ். பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் திரு. கிரீதர்சிங் பூபாலசிங்கம்,சட்டத்தரணி பாலசிங்கம், டாக்டர் சுகந்தன் இன்ஞசித் தம்பி,முஸ்லிம் பிரமுகர் எம். சஹாப்தீன் ஆகியோர் பிரதிகளை வாங்கி சிறப்பித்தனர்.

—குஹன்

## இணுவில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் வல்லஇறைவனைக் கண்டு மகிழ்கின்றுர்கள்

இத்திருவிளக்குப் பூஜையை சுமங்கலிப் பெண்கள் தமது மாங்கல்ய பாக்கியம் நிலைத்து நிற்கவும், இளம் கன்னிப் பெண்கள் தமக்கு நல்லதொரு ஒளிமயமான இல்வாழ்க்கை அமைய வேண்டிய சிறப்பாகச் செய்கின்றுர்கள்

இவ்வழியிலே கடந்த ஆண்டைப்போல இவ்வாண்டும் இணுவில் அருள் மிகு ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயத்திலே இணுவில் இந்துஇளைஞர் பேரவையினர் திருவிளக்குப் பூஜையை நாளை செவ்வாய்க்கிழமையன்று விமர்சையாகக் கொண்டாட உள்ளார்கள்.

அன்றைய தினம் பிற்பகல் மூன்று மணிக்குவிசேட,பூசை ஆராதனைகளும் பிற்பகல் 5-30 மணிக்குதிருமதி. வசந்தா வைத்தியநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், மேளக் கச்சேரிகளும், மாலை ஆறு மணிக்குத் திருவிளக்குப் பூசையும் இடம்பெறும். தொடர்ந்து சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தினரின் பஜனையுடன் அம்பிகை திருவீதி உலா வருவார்.

ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்

## அந்தியேட்டி அழைப்பு

யாழ்ப்பாணம், வடமராட்சி
பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும்
திரு. கதிரிப்பிள்ளை கந்தவனம்
(K. K. S.)
திருமதி கந்தவனம்
(Point - Pedro) அவர்களின்
அருமைமகளுமாகிய
செல்வி க. குமுதினி அவர்களின்
9–10–1984ல் நடைபெறும்
அந்தியேட்டிக்கிரியை, சவண்டீகரணம்
ஆகிய வைபவங்களில் பங்குபற்றுமாறு
உற்ருர், உறவினர், நண்பர்களை
வேண்டிக்கொள்ளுகிருேம்.

தந்தை, தாய், சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

2ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

99

# "சேவை செய்வதே...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்த இலட்சியத்துடனும் மனித சேவையே தங்கள் தலையாய கடமை என்ற உணர்வோடும் கஷ்டப்படுகின்றவர்களுக்கு உதவுகின்ற நற்பணியோடு தங்களைச் சார்ந்த சமூகத்தை மேல் நிலை அடையச் செய்வதிலும் முன்னின்று உழைத்து வருகின்றது.

அங்கவீனர்களுக்கு உதவுதல் நோயாளிகளுக்கு வைத்திய உதவியளித்தல், பஞ்சம், பட்டினி முதலானவற்றுக்கு எதிரான போராட்டம், கண் பார்வை இழப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் லயன்ஸ் கழகம் முழு மூச்சாகத் தன்னை அர்ப்பணித்துள்ளது. இவற்றேடு தங்கள் சமூகத்தில் மட்டுமின்றி உலக சமூகங்களிடையே ஐக்கியத்தையும், அன்பையும் அன்னியோன்னியத்தையும் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் வளர்க்கப்பட்டு வருகிறது.

இயற்கைச் சீற்றங்களான புயல், பூகம்பம், வெள்ளப் பெருக்கு போன்றவற்ருலும், பிறவற்ருலும் அழிவு ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் 'லயன்ஸ்இயக்கம்' முன்னின்று பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். எந்தவித பிரதியுபகாரமும்கருதாது இத்தகைய சேவைகளில் ஈடுபட்டு லயன்ஸ் சர்வதேச ஸ்தாபனம் இன்று உலகெங்கணுமுள்ள சமூகசேவைச் சங்கங்களில் அரியதாய், பெரியதாய். அனைவரதும் மதிப்பிற்கும் உரியதாய்த் திகழ்கிறது.

இத்தனை சிறப்புக்களைப் பெற்ற ''லயன்ஸ் இயக்கம்'' தனது சேவைகளையும், பணிகளையும் பின்வரும் வரிசைக் கிரமத்திற்கமைய ஆற்றிவருகிறது. கண்பார்வைக் குறைவானவர்கள் பார்வைபெற உதவுதல், செவிப்புலன் சிகிச்சை அளித்தல், நாட்டு மக்களை நற்பிரஜைகளாக்கும் பணி, கல்வி வளர்ச்சிக்குப்பாடுபடல், சுற்றுடலைப் பேணல், விளையாட்டுக்களில் ஈடுபாட்டையச்செய்தல், சுகாதாரப் பணிகள், சர்வதேச ஐக்கியத்தைக் காத்தல், சமூகசேவைகளைச் செய்தல், பொதுஜன உறவைவளர்த்தல் முதலியன.

இன்றைய காலகட்டத்தில் பிரச்னைகள் மத்தியில் தவித்துக் கொண்டிருக்கும் நாம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குச் சேவை செய்ய வேண்டுமெனச் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தூண்டப்படுகின்ருேம். எம்மத்தியில் உடமைகளை இழந்து, உடன்பிறப்புக்களை இழந்து துடிக்கின்றவர்களுக்குத் துணிந்து நின்று சேவை செய்ய வேண்டிய காலகட்டத்தில் எம்மையே மறந்து சேவைக்காக இழுக்கப்படுகின்ருேம். இந்நிலையில் நாம் எல்லோரும் அகதிகள் புனர்வாழ்வு, இளைஞர்கள் வேலைவாய்ப்புப் போன்ற சேவைத்திட்டங்களுக்கு முதல் இடம் கொடுக்கவேண்டியது அவசியமாகின்றது. இதே வேளையில் நமது மண்ணைக் காக்க மரம் நாட்டு இயக்கம் அதுவும் முக்கியமாக பனைமரம்வளர்த்தல், போதை வஸ்துக்களின் பாவனை இளைஞர் மத்தியில் பரவாது தடுத்தல், கசிப்பு உற்பத்திக்கு எதிரான இயக்கம், சலரோக தடுப்பு, இரத்ததானம் ஆகிய சேவைத்திட்டங்களுக்கு லயன்ஸ் கழகங்களோடு சேர்ந்து உதவியும் ஊக்கமும் ஒத்தாசையும் வழங்கவேண்டுமென சேவை மனப்பான்மை கொண்ட ஒவ்வொருவரையும் பல்வேறு இயக்கங்களையும் கோருகின்றேன்.

''இம்மண்ணுலகில் மானிடராய் பிறக்க கிடைத்த சலாக்கியத்திற்கு பிரதியுபகாரமாக நாம் செய்வது தான் 'சேவை' இச்சேவை செய்வதே எமக்கு ஆனந்தம்''

## நல்லை ஆதீனத்தில் திருமுறை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை காலை பன்னிரு திருமுறை முற்ருேதல் ஆரம்பமாகின்றது. அன்று காலை நல்லைக் கமலாம்பிகா சமேத கைலாசநாதர் கோவிலிலிருந்து பன்னிரு திருமுறைச் சுவடிகள் ஊர்வலமாக ஆதீனத்துக்கு கொண்டுவரப் பட்டபின் ஆதீன குருமகா சந்நிதானம் பாராயணத்தைத் தொடக்கிவைப்பார். பாராயணம் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிற்பகல் நடைபெறும்.

உலகில் அமைதியும் சுபிட்சமும் வளர்ச்சியடையச் செய்யும் பிரார்த்தனையாக இது நடைபெறுகின்றது.

## இலங்கையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ததாக 25 இந்திய உல்லாசப்பயணிகளுக்கும் மொத்தம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்சப்பட்டது அபராதத்தொகையைச் செலுத்தியபின்னரே இவர்கள் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்தமாத இறுதியிலும் சுங்கத்தீர்வையற்ற கடைகளில் கொள்முதல்செய்த பெறுமதிமிக்க பொருட்களை இலங்கையிலேயே விற்பனைசெய்த 29 இந்திய உல்லாசப் பயணிகளுக்கு தலைமன்னர் துறை சுங்க அதிகாரிகள் அபராதம் விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாஞேர் கலந்துகொண்டனர்.

25 மாணவர்கள் நேற்று முதல் எதிர்வரும் 10ந் திகதி வரை இரவுபகலாகத் தொடர்ந்து உண்ணுவிரதத்தை மேற்கொள்வார்கள். பெற்ருேருமகுறிப்பாகப் பல பெண்களும் இதில் கலந்துகொண்டனர்.

இது இவ்வாறிருக்க, எதிர்வரும் 10ம் திகதி யாழ் மாவட்டம் முழுவதும் அவ்வப்பகுதிகளில் மாணவர்களின் உண்ணுவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள 'தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம்' தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கடலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றனர். இப்படகில் சும்மார் 100 பிரயாணிகள் பயணம்செய்ததாகக் கூறப்படுகிறது.

## மற்றுமொரு படகும் சோதனை

நெடுந்தீவிலிருந்து குறிக்காட்டுவானுக்கு நேற்று பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்ட 'குமுதினி' என்ற மோட்டார் படகையும் கடற்படையினர் சோதனையிட்டபின்னர் அப்படகைச் செல்ல அனுமதித்தனர்.

## பேச்சுவார்த்தை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

':பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் அதேவேளையில், தமிழ் மக்களை பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.

''இளைஞர்களுக்கு உதவி செய்கிறவர்களை பயமுறுத்தும் வகையில், வவனியாவில் உரிமையாளர் சபாநாதனுக்கு நடந்துள்ளது, இதில் முதல் தடவையாக ஒரு புதிய வழியை கையாண்டிருக்கிருர்கள். இதைப்போலத்தான், கல்வியை,பொருளாதாரத்தை பாதிக்கும் விடயங்களில் கடும் நடவடிக்கை எடுப்பதனுல், தமிழ் மக்களுடைய ஆதரவை குறைத்துவிடலாம் என்று அரசு எண்ணுகிறது முடிவு இதற்கு மாருனதாகத்தான் இருக்கும்.

''இலங்கையில் தமிழ் மக்களுக்கு நேர்ந்தவற்றையும், தெய்வழிபாட்டு ஸ்தலங்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டங்களையும், வடஇந்தியாவில் கிராமம் கிராமமாக பிரசாரம் செய்வதற்கு முன்னுள் அமைச்சர் டாக்டர் சரண்சிங் சம்மதித்துள்ளார்''.

மாநாட்டில் தொடர்ந்து பங்குபற்றவேண்டுமா? அடுத்த நடவடிக்கை என்ன? என்பது பற்றி சபையினரின் கருத்து கோரப்பட்டபோது ஒரே ஒருவர் மட்டும் தான் கூட்டணியில் சிலர் குறை சொல்வார்கள் அதனுல் மாநாட்டில் தொடர்ந்து பங்குபற்றவேண்டும் என்று தெரிவித்தார். அவரும் பின்னர் தமது கருத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு முடிவை ஏற்றுக் கொண்டார்.

முன்னுள் மேயர் திரு. ஆர். விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது: ''தினமும் ஐந்தாறு இளைஞர்கள் பலியாகி வருகிருர்கள். இன்று இரவு என்ன நடக்கும் என்று எவருக்கும் தெரியாது. எங்கும் மக்கள் பயத்துடன் வாழ்கிருர்கள். மாணவர்கள் கல்வியை இழந்துள்ளார்கள். இனியும் தாமதிக்காமல் சட்டமறுப்பு இயக்கத்தை உடன் ஆரம்பிக்க வேண்டும். பேச்சுவார்த்தைக்கு இனிஇடமில்லை நாளாந்தம், உயிர்களை இழக்கின்ருேம். மிகவும் நெருக்கடியான நிலைமை மாநாட்டிற்கு போவதால் எவ்வித பயனும் இல்லை.

''கைது செய்யும் இளைஞர்களை, கைகளைகட்டிவிட்டு, கல்லுக்கட்டி கடலுக்குள் போடுகிருர்கள்.இதன்பின்பும் பேச்சுவார்த்தைக்கு ம்பாகத்தான் வேண்டுமா?

பிரஜைகள் குழுக்கள் போன்று எத்தனையோ குழுக்கள், போராடதயாராகிவருகின்றன. தலைவர்கள் வழிகாட்டவேண்டும். இராணுவத்தை வாபஸ்பெறசெய்ய வேண்டுமானுல் உடனடியாக சட்டமறப்பு இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும்.

## கடத்தப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி எம்.கே. சுகததாசா, சார்ஜன்டுகள் ஐ. பாலசிங்கம், எஸ். பூலோகராசா, கான்ஸ்டபிள்கள் எஸ். கோபாலகிருஷ்ணன், கே. சிவராஜா, என் நாதன் ஆகியோரைக்கொண்ட பொலிஸ் கோஷ்டியே கொழும்புசென்று புலன்விசாரணைகளை மேற்கொண்டு இந்த வாகனங்களை மீட்டுவந்தது.

## சோவியத்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

சோவியத் அரசாங்கம் இது குறித்து கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

'பல்கன்' விமானச்சேவை பிரதிநிதியும் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுளளார். ஆனுலும் அவர்மீது அரசியல் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லையென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

# செய்திச்சிதறல்

## 'சிறுர்களின் கல்வி மூலாதாரம்'

(கிளிநொச்சி)

''சமுதாய முன்னேற்றத்திற்கு இளம் சிறுர்களின் அடிப்படைக்கல்வி மூலாதாரமாக அமைகிறது''.

இவ்வாறு கிளிநொச்சி உதய நகரில் அமைக்கப்பட்ட அமரர் நாகநாதன் இராசம்மா ஞாபகார்த்த பாடசாலையை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்து உரையாற்றுகையில் கிளிநொச்சிப் பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ். இராசலிங்கம் குறிப்பிட்டார்.

உதயநகர் நாகதம்பிரான் ஆலய அறங்காவல்சபை ஆதரவில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு கிளிநொச்சி கிராம சேவையாளர் எஸ். தனபாலசிங்கம் தலைமைதாங்கினுர்.

பிரதம விருந்தினர்களாக பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச்சங்க செயலாளர் எஸ் திருக்கேதீஸ்பரன், நீர்ப்பாசன தொழில்நுட்ப அதிகாரி எஸ். எஸ் அச்சுதன்பிள்ளை, டாக்டர் கே. வி. கே திருலோக மூர்த்தி, கிராம முன்னேற்றச் சங்க தலைவர்கள் பி. கணேசபிள்ளை, எஸ். கோபால், திரு. விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நிர்வாகிகள்

பரந்தன் குமரபுரம் கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்புக்கூட்டம் குமரபுரம் இந்து கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவானுர்கள்:- தலைவர்: பொ. அமரசிங்கம், உபதலைவர்: கே. ஸ். வேலாயுதம், செயலாளர்: த. சூ. ஞானப்பிரகாசம், உபசெயலாளர்: எம். ஈ. அன்ரன், தனுதிகாரி: இ தர்மலிங்கம்.

## தபாலதிபருக்கு பாராட்டு

(கொழும்புத்துறை)

வயாவிளான் தபால் நிலையத்திலும் ஓய்வூதியம் வழங்கப்பட்டது இத்தபால் நிலையத்திலிருந்து கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் சுமார் 100 ஓய்வூதியம் பெறுவோர் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொண்டனர்

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட தபால் நிலைய அதிபர் திரு சி. தருமராசனை ஓய்வூதியம் பெறுவோர் பாராட்டியுள்ளனர்.

## 'பைசூர்' விநியோகம்

(கல்வியங்காடு)

யாழ். கல்வித்திணைக்கள நலன்புரிச் சங்கம் இத்திணைக்களத்தில் கடமைபுரியும் சகல ஊழியர் ட்கும் மாதந்தோறும் மைசூர்பருப்பு ஒருகிலோ வீதம் கொடுத்து வருகிறது

கடன் அடிப்படையில் வழங்கப்படும் ஒரு கிலோ பருப்பு ரூபா 17-50 சதத்துக்கு வழங்கப்படுகிறது.

## கொடுப்பனவுகள்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம்கல்வித்திணைக்களத்து கொடுப்பனவுகளும் தேவைப்படும் காலங்களில் அவ்வப்போது பெற்று வந்து கொடுக்கப்படுகின்றன.

## அதிபர் இடமாற்றம்

(சரவணை)

ஊர்காவற்றுறை-கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. செ கதிர்காமத்தம்பி இம்மாதம் தொடக்கம் நவாலி மகாவித்தியாலயத்திற்கும், ஊர்காவற்றுறை, புனித அந்தோனியார் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. சபாரத்தினம் கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய அதிபராகவும் நியமனம் பெற்றுள்ளனர்

## புதிய நிர்வாகிகள்

(சரவணை)

சரவணை - பள்ளம்புலம் ஸ்ரீமுருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் ஆண்டுக் கூட்டம் டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளகத் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: டாக்டர் கே. பாலசுப்பிரமணியம், காரியதரிசி: த அருணகிரிநாதன், தனுதிகாரி: ச, இராசரத்தினம், காரியஸ்தர்: நா. இராமச்சந்திரன், சொத்து உடமை அதிகாரி: பொ. வெற்றிவேலு, நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## வாலிபரின் அஸ்தி வந்துசேர்ந்தது

(சரவணை)

மேற்கு ஜெர்மனியில் வேலை தேடிச்சென்ற புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகசபை திருவாசகம் என்பவரின் 'அஸ்தி' அனுப்பிவைக்கப்பட்டது.

விமான நிலையத்தில் இவரது அஸ்தியை உறவினர் எடுத்து வந்து கீரிமலை க்ஷேத்திரத்தில் கரைத்தனர்.

சுமார் 45 நாட்களுக்கு முன் பிரஸ்தாபஇளைஞன் மாரடைப்பால் மேற்கு ஜெர்மனியில் காலமானுர்.

## பதவியுயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதம தபால் நிலையத்தில் பிரதித்தபாலதிபராக பல வருடங்கள் கடமையாற்றி வந்த திரு. எஸ். கருணுநிதிபதவி உயர்வுடன் பூநகரிதபாலதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இவர் ஒரு தொழிற்சங்க வாதியுமாவார்.

## புதிய தலைவர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய தலைவராக தொழிலதிபரும் சமூக சேவையாளருமான திரு. எஸ். முத்துப்பிச்சை தெரிவானுர்

உப தலைவர்களாக சி இரத்தினமும் எஸ். கோகுலநாதனும் செயலாளாளராக பொ. சிற்றம்பலமும் உபசெயலாளராக தி. கனகசபதியும் பொருளாளராக ந சிவகுமாரும் கணக்காய்வாளராக கி. சின்னராசாவும், போஷகர்களாக இ. கிருஷ்ணராசா, நா. சுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவானுர்கள்.

## சாயி தொண்டர்கள் இரத்ததானம்

[வவனியா]

வவனியா சத்தியசாயிபாபா சமித்தியினைச் சேர்ந்த பதினெரு தொண்டர்கள் இரத்த தானம் செய்துள்ளனர்.

யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் இவர்கள் இரத்ததானம் செய்தனர் என்று மேற்படி சமித்தி தலைவர் டாக்டர் எஸ். நிரஞ்சன் கூறினுர்.

## யானை தாக்கியது

[வவனியா]

பாவற் குளத்தில் விவசாயி ஒருவரின்வீட்டை யானைதாக்கியது. இங்கிருந்த 14 மூட்டை நெல்லையும் காட்டு யானை தின்றதாம்.

அந்த விவசாயி யானை வருவதைக் கண்டு தனது மனைவி பிள்ளைகளுடன் பின்பக்கத்தால் ஓடிவிட்டாராம்.

## பாடசாலைக் கட்டிடங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பாடசாலை கட்டிடங்களை கல்வி இலாகாவின் அனுமதியின்றி எக்காரணம் கொண்டும் பொதுவைபவங்களுக்கு வழங்க வேண்டாமென்று கல்விப்பணிப்பாளர் சகலபாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார். சிலபாடசாலைகள் இலாகாவின் அனுமதியின்றி வெளியாரால் பாவிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ரோம் பயணம்

மட்டக்களப்பு ஆயர் இல்லத்தைசேர்ந்த புளியந்தீவு பங்குத்தந்தை வணபிதா. பயஸ் பத்மராஜா தனது குருத்துவத்துறையில் உயர் கல்வியைத் தொடரும்பொருட்டு அண்மையில் ரோமாபுரி பயணமானுர்.

## இரும்புக் கதிரைகள் விநியோகம்

மட்டக்களப்பு மாவட்ட ஆரம்பபாடசாலைகளுக்கு இனிமேல் இரும்புத்தளபாடங்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன. கல்விச்சேவைகள் அமைச்சின் ஆலோசனையின்பிரகாரம் தான் இவ் இரும்புக்கதிரைகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

## நூலகக் கட்டிடத் திறப்பு விழா

[புங்குடுதீவு]

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள புதிய நூலகக் கட்டிடத்தை இம்மாதம் 10ம் திகதி காலை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாப்பிள்ளை திறந்துவைப்பார்.

புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு க குகதாசன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ் கல்வியதிகாரி திரு கே கந்தசாமி சிறப்புரையாற்றுவார் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தின் வரலாற்றைச் சித்தரிக்கும். 'எங்கள் வித்தியாலயம்' என்னும் நூலும் இவ்வைபவத்தில் வெளியிடப்படவுள்ளது.

## இடமாற்றம்

மட்டக்களப்பு மாவட்ட தபால் நுண்ணுய்வுப் பரிசோதகராகக் அருணகிரிநாதன் வவனியா மாவட்டத்திற்கு இடமாற்றம் இவரது இடத்திற்கு அட்டாளைச்சேனை தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு எஸ். பாலசுப்பிரமணியம் நியமனம் பெற்றுள்ளனர்.

## கனடா பயணம்

கிழக்கிலங்கையின் பிரபல எழுத்தாளரான திரு. மா. த செல்வராஜ கோபால் தனது குடும்பத்துடன் கனடாவில் குடியமர அண்மையில் கனடா பயணமானுர்

## இருநேரப் பாடசாலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் இருநேரப்பாடசாலைகள் நடத்துவது குறித்து மட்டக்களப்பு திட்டமிடல் பிரிவு கல்வி இலாகாவின் ஆலேசனையைக் கேட்டுள்ளது இதன்பிரகாரம் கல்விப்பணிப்பாளர் இதுபற்றி பெற்ருேர் அபிப்பிராயத்தை உடன்அனுப்பிவைக்குமாறு மத்தியமகா வித்தியாலய, மகாவித்தியாலய அதிபர்களைக் கோரியுள்ளார்.

## தொண்டர் ஆசிரியர்

மட்டகளப்பு மாவட்டத்தில் இதுவரை 685 பேர் தொண்டர் ஆசிரியர் நியமனத்திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்

கல்குடா106, பட்டிருப்பு126 மட் வடக்கு 208, மட். தெற்கு 245 என இக்கல்விவட்டாரங்களில் இவ் ஆசிரியர் அடங்குவர்.

## காணிகள் பகிர்ந்தளிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வனஇலாகாவினுல் ஆறு கிராமங்களில் காடுவளர்ப்புத்திட்டத்தின்கீழ் அரசாங்க காணிகள் தலா 2ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

சத்துருகொண்டான் 50ஏக்கர் இனுபடிச்சேனை 200ஏக்கர் மைலம்பாவெளி 70ஏக்கர், அறுமுகத்தான் குடியிருப்பு 90ஏக்கர்என வழங்கப்பட்டுள்ளது.

இக்காணியில் மா, பலா, மரமுந்திரிகை, இப்பில் இப்பில் போன்ற பயன்தரும் மரங்கள் நடப்படுமென்றும் 7வருடங்களால் பயன்தருமென்றும் மாவட்டவன அலுவலகர் திரு கே. சண்முகராசா தெரிவித்தார்.

## உதவிஅரச அதிபராக நியமனம்

பிரபலஎழுத்தாளரும் முன்பு மட்டக்களப்பு கல்விஇலாகாவின் நிதி உதவியாளராகவும் கடமையாற்றிய திரு. இரா நாகலிங்கம் (அன்புமணி) இலங்கைநிர்வாக சேவைபயிற்சியின் பின்பு களுவாஞ்சிக்குடி உதவிஅரசாங்க அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## தலைவியானுர்

(வவனியா)

வவனியா குடியிருப்பைச் சேர்ந்த திருமதி ராஜி கணேசரட்ணம் வவனியா மாவட்டக் கூட்டுறவு மகளீர் குழுவின் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கைதேசிய கூட்டுறவுச் சபையின் வவனியா மாவட்ட மகளீர்பயிற்சி நிறுவனத்தின் ஆசிரியருமம் வவனியா தமிழ்ப்பகுதி கூட்டுறவுமகளீர் குழுவின் தலைவியுமாவார்.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் இளந் தொண்டர் சபையினரின் நவராத்திரி விழா சிறப்பான முறையில் நடைபெற்றது

இவ் விழாவில் திரு. இரகுபதிபாலஸ்ரீதரன் உரைநிகழ்த்துகையில் ''இன்றையய கால கட்டத்தில் தமிழ் மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற கல்வி, செல்வம் ஆகியவற்றின் சிறப்பை அன்றே அறிந்த எமது மூதாதையர் இம் மூன்றுக்கும் தெயவங்களை உருவகித்து அக்காலம் தொட்டே சிறப்பாக நவராத்திரி விழாவை கொண்டாடிவருகின்றனர்'' என்று கூறினுர்.

# ரூபவாஹினி

## இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

8-ம் திகதி திங்கட்கிழமை
மாலை
6-35 ஊரும் உலகும்
7-15 கலையரங்கம் தொலைக் காட்சி நாடகம் துணைஒன்று' அங்கம் 1

9-ம் திகதி செவ்வாய்க்கிழமை
மாலை
6-30 நம்நாட்டுத் திரைப் படத் தொடர் நான் உங்கள் தோழன் அங்கம்-2
7-15 பௌத்த சமயப் பேச்சு (தமிழில்)

10-ம் திகதி புதன்கிழமை
மாலை
5-30 இது உங்கள் நாடு (தமிழ்)
6-00 மலரும் அரும்புகள்
8-45 திரைப்படம் ''அவர்கள்'' கமலஹாசன், ரஜனிகாந்' சுஜாதா நடித்தது
9-50 திரைப்படம் (தொடர்ச்சி)

12-ம் திகதி வெள்ளிக்கிழமை
மாலை
6-00 விளையாட்டுப் பயிற்சி [தமிழில் உரையுடன்)

## இன்று

மாலை
5-30 நாட்டுவளம் [சிங்களம்]
5-35 வூடி வூட் பெக்கர் என்ட் பிரெண்ட்ஸ் காட்ர்டூன் சித்திரம் [ஆங்கிலம்]
6-00 தகவல் நிகழ்ச்சி [ஆங்கிலம்]
6-20 விநோதத்துடன் பௌதிகம் [ஆங்கிலம்]
6-35 'ஊரும் உலகும்' சஞ்சிகை நிகழ்ச்சி [தமிழ்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 கலை அரங்கம்
7-45 'ரேகா' நாடகம் [சிங்களம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 இசை நிகழ்ச்சி [சிங்களம்]
8-55 யெஸ் மினிஸ்டர் நகைச்சுவைச் சித்திரம் [ஆங்கிலம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
10-00 'சார்ளிஸ் ஏஞ்சல்ஸ்' 3 பெண்களின் துப்பறியும் சித்திரம்
10-30 உலகச் செய்திகள்
10-35 சார்ளிஸ் ஏஞ்சல்ஸ் தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## ''பக்தனும் கலைஞனும்''

[யாழ்ப்பாணம்]

''ஒரு பக்தன் எவ்வாறு மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வழிபட்டு அருள் பெறுகிருனே அதேபோல் கலைஞனும் மனதை அலையவிடாது ஒரு நிலைப்படுத்திக் கலைகளில் ஈடுபடுகிருன்.''

இவ்வாறு யாழ் வண்ணுர் பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தில் அதிபர் திரு கா. கணேசநாதன் தலைமையில் நடைபெற்ற விஜயதசமி பூசையின் போது வில்லிசை நடாத்திய நாச்சிமார் கோவிலடி இராஜன் வில்லிசைக் குழுவினரைப் பாராட்டி பட்டமளித்துப் பேசிய நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி கூறினுர்.

trust travel service

11A. மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.
T. P. 24111

★ உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கு தொடர்பு கொள்ளக்கூடிய நம்பகரமான ஸ்தாபனம்.

★ ஏரோபுளட் C S A. CPAIR முதலான விமானக் கம்பனிகளில் விசேட விலையில் விமான டிக்கட்டுகளை பதிவு செய்து கொள்ளலாம்.

★ பரிஸ் பேர்லின், லண்டன் ஆகிய முக்கிய நகரங்களுக்கு விசேஷ விலையில் SPECIAL OFFER) டிக்கட்டுகளை பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
NIGHT SHIFT
(adults only)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ரஜனிகாந்த் சௌகார்ஜானகி தீ
தீபாவளி வெளியீடாக
கே. பாலசந்தரின்
**பூவிலங்கு**

**ராணி** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30.
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, பத்மினி நடித்த
**நான் வணங்கும் தெய்வம்**
புதிய பிரதி

**சாந்தி** (யாழ்நகர்)
10-30—2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
**சத்யசுந்தரம்**
(கலர் - புதிய பிரதி)

**ரீகல்** [யாழ் நகர்]
10-30, 2-30, மட்டும்
**ரத்தத்தின் ரத்தமே**
10-10-84 முதல்
VISITING HOURS
(strictly for adults)
இருதயம் பலவீனமான வர்கள் கண்டிப்பாக இதனைப் பார்ப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 — 6-45
Every lovers should see this film!
Willie games.....
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 6-15
சிவாஜி-விஜயா
**ஊரும் உறவும்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-15,
HEAVEN'S GATE
(adults only)

**வின்ஸர்** [யாழ்.]
தினசரி 10-30, 2-00, 4-30, 6-30
புரூஸ் லீ யின் வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
**"BIG BOSS"**
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
(புத்தம் புதிய பிரதி)


## தீபபூசை

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி சுந்தசுவாமி கோவில் சுமங்கலி தீபபூசை எதிர்வரும் புதன்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

## பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் பாதுகாப்பு ஊழியரான திரு. எம். பிரான்ஸீஸ்குரூஸ் பாதுகாப்புப் பிரிவினருக்கான உடற்பயிற்சி, அணிவகுப்புப்பயிற்சிகளுக்குப் பொறுப்பான சார்ஜண்டாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தில் 22 வருடகாலம் பயிற்றுநராக இவர் கடமையாற்றினார்.

மன்னார் மாவட்டத்தின் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், புனித. ஆனாள் மகாவித்தியாலயப் பழைய மாணவராவார், பாடசாலை நாட்களில் பல விளையாட்டுப் போட்டிகளில் விருதுகளைப் பெற்ற இவர், சமூகப் பணிகளிலும் ஆர்வங்காட்டியிருக்கிறார்.

# "தொழில் இனரீதியாக பாடுபடும் ஒரே சங்கம்"

## பரந்தனில் தமிழாசிரியர் நிதிச் செயலாளர்

(கிளிநொச்சி)

"தொழில் ரீதியாக மட்டுமல்ல, இன ரீதியாகப்பாடுபடும் ஒரே தொழிற்சங்கம் இலங்கைத் தமிழாசிரியர் சங்கமாகும், இனத்தின் விடிவும் ஆசிரியர்களின் சுபீட்ச வாழ்வும் தான் எமது இலட்சியமாகும். எமது இலட்சியப் பயணத்தில் முன்னேறிச் செல்ல ஆசிரியர்கள் அனைவரும் ஒரு அணியில் திரளுமாறு நேசக் கரம் நீட்டி அழைக்கிறேன்."

இவ்வாறு இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பரந்தன் கல்வி வட்டாரக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் இலங்கைத் தமிழராசிரியர் சங்கத்தின் நிதிச்செயலாளர் திரு. என். சோதிநாதன் குறிப்பிட்டார்.

பரந்தன் இந்து கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்திற்கு திரு பொன் தில்லைநாதன் தலைமை தாங்கினார்.

பிரஸ்தாப சங்கத்தின் நிருவாகச் செயலாளர் திரு. த அருணகிரிராசா, பரந்தன் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எம். சண்முகநாதன், சகாயநிதிச் சங்கச் செயலாளர் திரு. எஸ். கனகசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

தமிழராசிரியர் சங்கக் கிளிநொச்சிக் கிளைத் தலைவர் திரு. கே. நாகலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிதிச்செயலாளர் திரு சோதிநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது!-

"தமிழராசிரியர் சங்கத்தின் பரந்தன் கிளையினர் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் இயங்கி வருகின்றனர். இப்பகுதி ஆசிரியர்களும் பலவித இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இரண்டு அரசாங்க அதிபர் பிரிவை உள்ளடக்கிய பிரதேசம் அதிக விஸ்தீரணத்தைக் கொண்டிருப்பதுடன் போக்குவரவுக் கஷ்டங்களும் உள்ளது இந்நிலையில் அங்கத்துவ எண்ணிக்கையை அதிகரித்து இக்கிளை முன்னேறி வருவது பெருமைக்குரியவிஷயமாகும்.

"எமது சங்கத்தில் இருந்து சங்கத்தைச் சீர்குலைக்க முயல்பவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டோம். எமது பாரம்பரியத்தைப் பேணி ஐக்கியத்துடனும் ஒருமைப்பாட்டுடனும் சங்கத்தைக் கட்டி வளர்க்க பாடுபடவேண்டும் என்றார்.

நிர்வாகச்செயலாளர் திரு. அருணகிரிராசா பேசுகையில், "இன்று தமிழ் மக்களாகிய நாம் அரசியல் அநாதைகளாக நிர்க்கதியானநிலையில் வாழுகின்றோம். இந்தநிலையில் இலங்கை தமிழாசிரியர்சங்கம் எதையும் தாங்கும் இதயத்துடன் எமது இலட்சியப் பயணத்தில் முன்னேற பாடுபடுகிறது" என்றார்.

## 'லிவ்ற்' பழுது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வைத்தியசாலையில் கர்ப்பிணிவார்ட்டுக்குரிய 'லிவ்ற்' பழுதடைந்து இரு மாதங்களுக்கு மேலாகிவிட்டபோதிலும் இதுவரை திருத்தப்படவில்லை

இதனால் கர்ப்பிணிகள் பிரசவ வேதனையுடன் மேல்மாடிக்கு நடந்துசெல்லும் பரிதாபகரமான நிலையை இங்கு காணக்கூடியதாக உள்ளது.

இவ் ஆஸ்பத்திரியில் கர்ப்பிணித்தாய்மார் வார்ட்டுக்கள் மூன்றும்மேல்மாடியில் உள்ளன கர்ப்பிணிதாய்மாரை நடத்தி அழைத்துச் செல்லும் போது சுமார் 25க்கும்மேற்பட்டபடிக் கட்டுக்களை கடந்துசெல்ல வேண்டியவர்களாக உள்ளனர்.

இவ்விடயம்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் புகார்தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கர்ப்பிணிகள் கவலை தெரிவித்தார்கள்.

## சமய சிந்தனையை ஏற்படுத்தியவர்



(மாவட்டபுரம்)

காங்கேசன்துறைப் பகுதியில் சிறார்களுக்கெல்லாம் சமய சிந்தனையை ஏற்படுத்தி இறை வழிபாட்டிலும், சமய நெறியிலும் அவர்களை ஈடுபட வழி சமைத்த செல்வி சரோஜினி தேவி வல்லிபுரம் மறைந்த ஓராண்டு நிறைவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சிறுவயதிலிருந்தே சமய ஆசாரப்படி வாழ்ந்து தமது வழியில் ஏனையோரையும் ஈடுபட வழிகாட்டினார். சமய வகுப்புக்கள் நடத்துதல், கூட்டுப் பிரார்த்தனைகள் நடத்துதல், ஆலயத் தொண்டுகள் செய்தல் என்பவற்றில் ஈடுபட்டு இறைபணியுடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் இவர்:

சிறுவர்கள் மனதில் சமய சிந்தனையை வளர்த்து இறை வழிபாட்டில் ஈடுபாடு கொள்ளச்செய்வதில் அன்னார் பெரும் பங்கு வகித்தார். நல்லன கற்று நற்குணங்களுடன் நல் வாழ்வு வாழ்ந்து சைவத்திற்கும், சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்தவர் அன்னார்.

—ஞானு

## தென்கொரியா செல்கிறார்



(யாழ்ப்பாணம்)

யாழ். துரைஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. இரத்தினம் துரைராசா தென்கொரியாவுக்குச் சென்றுள்ளார். பிரபல வெளிநாட்டு வர்த்தக ஸ்தாபனமான வேண் பிரதர்ஸ் அழைப்பின் பேரில் செல்லும் இவர் சியோல் நகரில் இடம்பெறும் சர்வதேச சிஸ்ரு பொருட்காட்சியையும் பார்வையிடுவார்.

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—22(08-10-1984)
வாரம்—திங்கள்
திதி—சதுர்த்தசி பின் இரவு 3-41வரை
நக்ஷத்திரம்—பூரட்டாதி பிற்பகல் 2-47வரை

மேடம்:- படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள் மாதுருவழிப் பெருமையுண்டு சிலர் புதுமனைகட்டுவதற்கும் ஆலோசனை செய்வர்.

இடபம்:- அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும் ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும் மோகன வாழ்வும் உண்டு.

மிதுனம்:- சிக்கலான பிரச்னைகளை தள்ளிவைப்பது நன்று எச்சர்ந்தப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடனிருக்கவும்.

கடகம்:- நடுநிலை தவறாது நல்லதை செய்வீர்கள் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

சிங்கம் ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும். காணித் தொல்லையுடன் கடன் படவும் நேரிடும்.

கன்னி:- ஆனந்த மயமான வாழ்கை இசைததுறையில் பிரியம் ஏற்படும் களஸ்திரப் பேச்சுக்கும் இடமுண்டு.

துலாம்:- குறை கேட்க நேரிடும் கடமையில் தடைகள் தோன்றும் நஷ்டதிற்த இடமுண்டு.

விருச்சிகம்:- புண்ணியவழியில் அதிக செலவு ஏற்படும் பிதாவழிச் சிறப்புக்கும் இடமுண்டு.

தனுசு:- எதிர்பார்த்த பொருள் வரவுக்குமிடமுண்டு பூமியால் லாபமுண்டு புத்திரவழியாலும் நன்மையுண்டு

மகரம்:- நண்பர்களின் உதவிக்கு இலக்காகுவீர்கள் எதிர்பாரத வகையில் பொருள் வரவிற்குமிடமுண்டு.

கும்பம்:- இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும் இதய பாரம் வேதனைப்படுத்தும் அமைதி நன்று.

மீனம்:- இன்று ஏமாற்றம் தாக்கும் குடும்பத்தில் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## தட்டுப்பாடு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காரி டாக்டர் கே. எஸ். சிவகுரு இது தொடர்பாக மேலிடத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட துரித நடவடிக்கையைஅடுத்து கடந்தவாரம் மேற்குஜெர்மனியிலிருந்து புதிதாகத் தருவிக்கப்பட்ட நல்ல ரக கண்ணாடி சிலேட்டுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதனைத்தொடர்ந்து இப் பகுதியிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மீண்டும் மலேரியா இரத்தப் பரிசோதனை வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

## விசேட அடையாள அட்டைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைகள் இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு பொலிஸ் நிலையங்களில் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வாழைச்சேனை, ஏறாவூர், மட்டக்களப்பு, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி ஆகிய ஐந்து பொலிஸ் நிலையங்களிலும் மேற்படி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

14-35 வயது வரையிலான நபர்கள் தமது புகைப்படத்துடன் ஊர்பிரமுகர்கள் இருவரின் ஒப்பம் பெற்று கிராம சேவையாளர் மூலம் தமது விண்ணப்பத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிடம் ஒப்படைத்து இவ் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.


**31-வது நாள் நினைவஞ்சலி**
**திருமதி நாகம்மா இராமலிங்கம்**
(சாத்திரியார்)
மலர்வு: 12-2-1917 உதிர்வு: 8-9-1984
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
'கலாபவனம்',
4-ம் வட்டாரம், புங்குடுதீவு மேற்கு. (98)

## தனியார் வீடொன்றில் ரூ. 18,000 பொருட்கள் கொள்ளை
### தெல்லிப்பளையில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளையில் தனியார் வீடொன்றில் தாலிக்கொடி, விலையுயர்ந்த உடுபிடவைகள் உட்பட 18,000 ரூபா பெறுமதியான பொருட்கள் இனம் தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை மகாதனை என்னுமிடத்தில் பாலயோகன் என்பவரது வீட்டில் இக்கொள்ளை இடம் பெற்றது.

அதிகாலை 2 மணியளவில் வீட்டில் புகுந்தநபர்கள் மேற்படி பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## காங்கேசன் தொழிலாளி விபத்து மரணம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் விபத்தில் சிக்கி மரணமான தொழிலாளியின் மரணம் விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த முதலித்தம்பி சிவபாஸ்கரமூர்த்தி (வயது27) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்திய சமயம் சிமெந்து ஆலை முகாரி இராசு பஞ்சரத்தினம், பிரேத பரிசோதனை செய்த மாவட்ட வைத்திய அதிகாரி திரு.எம் கதிரவேற்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

கல்லுடைக்கும் பகுதியில் வேலைபார்த்த காலமானவர் இயந்திரத்தை துப்பரவு செய்வதில் ஈடுபட்டிருந்த சமயம் தவறுதலாக அதனுள் அகப்பட்டு மரணத்தை தழுவியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கினர்.

தெல்லிப்பழை தென்மேற்கு கிராம சேவையாளர் திரு கே. சிவலாயுதபிள்ளை விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்

[கொழும்புத்துறை]

ஈழத்துப் பிரபல கவிஞர்கள் பதினொரு பேரின் கவிதைகளைக் கொண்ட தொகுப்பொன்றை ''பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்'' என்ற பெயரில் தமிழகத்திலுள்ள பிரபல வெளியீட்டு நிறுவனமான ''க்ரியா'' வெளியிட்டுள்ளது.

இக்கவிதைத் தொகுதியில் மஹாகவி, நீலாவணன், முருகையன், மு. பொன்னம்பலம், எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், தா. சிவராமலிங்கம், சி சிவசேகரம், அ. யேசுராசா, வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன் ஆகிய பதினொரு ஈழத்துக் கவிஞர்களின் படைப்புக்கள் இடம்பெறுற்றுள்ளன.

இக்கவிதைகளை எம். ஏ நுஃமான், அ. யேசுராசா ஆகியோர் தொகுத்துள்ளனர்.

## தமிழ்த்தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தமிழ்த்தினப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினொரு கல்வி வட்டாரங்களிலும் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்வர். பாஒதல், பேச்சு, வாசிப்பு, கட்டுரை ஆக்கம், என்பன இன்றைய போட்டியில் இடம் பெறும்.

பத்தாம் திகதி புதன்கிழமை நாடகப்போட்டியும், பதினோராம் திகதி கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இரு மாவட்டங்களுக்கிடையிலான வலயப் போட்டியும் இடம் பெறுகின்றன.

## மரண அறிவித்தல்
### திருமதி இராஜரெட்ணம் அன்னமுத்து

திருமதி இராஜரெட்ணம் அன்னமுத்து 7-10-84 இல் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலம்சென்ற தபால் அதிபர் இராஜரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற செல்லத்துரை, திருமதிகள் சின்னத்தம்பி இராசம்மா, சரவணமுத்து தங்கம்மா, தெய்வேந்திரம் செல்வராணி, செல்வி நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும், M. S. தங்கராஜா (ஓய்வுபெற்ற லிகிதர்), எஸ். துரைராசா [Electricity Board] S. நவரத்தினம் [Lucknivasa - Quest house, Jaffna], S. பத்மநாதன் (Commereial Bank, Jaffna), S. செல்வராஜா (Saudi), S. ஜீவரட்ணம் (Rambukhnna), T. இரவீந்திரன் (Retired Authorised officer), R. மகாலிங்கம் (U, K.), திருமதிகள் புவனேஸ்வரி கதிரேசன், இராஜேஸ்வரி சண்முகம், புஸ்பராணி புஸ்பரெட்ணம் [Walkers], பாக்கியமலர் மாணிக்கேந்திரம் [Teacher], இந்திரநீலா கணநாதன், Doctor இந்திரமலர் தகநாயக்க ஆகியோரின் அருமைப் பெரியதாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைகளுக்காக இலக்கம் 203, நாவலர் வீதி இல்லத்தில் இருந்து 9-10-84 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

(100)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.

## பாதுகாப்புக்கு அதிகநிதி

(கொழும்பு)

அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட விருக்கும் அடுத்த ஆண்டுக்கான 'பட்ஜட்'டில் பாதுகாப்புத்துறைக்கே கூடுதலான நிதி ஒதுக்கப்படவுள்ளது.

சுமார் 250 கோடி ரூபா பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்படவுள்ளது.

## திருப்பி அனுப்பப்படுவர்

(கொழும்பு)

''சுவிற்ஸலாந்திலுள்ள இலங்கைத் தமிழர்கள் தாம் உண்மையான அகதிகள் என்று நிரூபிக்காவிட்டால் அவர்கள் இலங்கைக்கு மீண்டும்திருப்பி அனுப்பப்படுவார்கள்'' என்று ஜெனிவா, சைப்பிரஸ், கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு சென்று திரும்பியுள்ள வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. எம். எஸ் அமரசிறி கூறியுள்ளார்.

## கப்பலில் நடந்த வாணிவிழா

(மன்னர்)

தலைமன்னர்-ராமேஸ்வரம் கப்பலில் வாணி விழா, சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இவ்விழாவில் கப்பல் காப்டன் திரு மிராண்டா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மீண்டும் பீரங்கி சத்தங்கள்

(மாவிட்டபுரம்)

பலவார இடைவெளிக்கு பின்னர் நேற்றுமுன்தினமிரவு கடற்படையினரின் பீரங்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன.

கடற்படையினர் கடலில் நடத்தும் பீரங்கி வேட்டு சத்தங்கள் பலவாரமாக இல்லாது இருந்தன மீண்டும் நேற்று முன்தினமிரவு பீரங்கிச் சத்தங்கள் கேட்டதால் கடற்கரைப்பகுதியிலுள்ள மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

## ப. நோ. கூ.சங்க பாதுகாப்பு மகாநாடு

(நெடுந்தீவு)

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களின் பாதுகாப்பு சம்பந்தமானமகாநாடொன்று இன்று காலை 10-30 மணிக்கு யாழ். பிரதிப்பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டை சிரேஷ்ட பொலிஸ் அதிபரும், இணைப்பதிகாரியுமான திரு. எஸ். ஜி. குணவர்த்தன கூட்டுகிறார்.

மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ; சங்கத்தலைவர்களையும் அவர் கேட்டுள்ளார்,

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் வை எம் சி ஏ உதைபந்தாட்டக்கோஷ்டிக்குமிடையில் இன்று சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது இப்போட்டி இன்று மாலை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

[வி]

## இப்படியும் நடக்கிறது

அது ஒரு பானச்சாலை. சில தினங்களுக்கு முன்னர் இந்தச் சாலையிலிருந்து பெரும் பெரும் பீப்பாய்களும், பானமும் கொள்ளையடிக்கப்பட்டது;

'வர வர நிலைமை மோசமாகிக்கொண்டு போகிறதே...' என்று சிந்தித்த ஒரு இயக்கத்தினர்; தீவிரதேடுதலின் பின்னர் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து விசாரித்த போது; கொள்ளையை அவர்கள் ஒப்புக் கொண்டு தாங்கள் அபகரித்த பீப்பாய்களையும் அடுத்தநாள் ஒப்படைத்து விட்டனர்.

தண்டனை போதாது என்று அந்த இயக்கத்தினர் யோசித்தனர் போலும். இதன் எதிரொலி—

அந்தச் சாலையில் கொள்ளையடிக்கப்பட்ட பானத்தின் பெறுமதியை குறிப்பிட்ட திகதியில் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன், அபகரிக்கப்பட்ட பீப்பாய்களை கொள்ளையர்களின் தலையில் வைத்து, சுலோக அட்டைகளுடன் ''நாங்களே கொள்ளையடித்தோம்'' என்று வாய் வலிக்கக் கத்திக்கொண்டு, அந்தச் சாலையைச் சுற்றியுள்ள வீதிகள் வழியாக ஊர்வலம் வந்த போது......

ஊர்திருந்தும் இந்த நடவடிக்கையை ஏராளமான மக்கள் பார்த்து ரசித்தனர்!

மூக்கைப் பிடிக்காதீர்கள், இடம்: கோண்டாவில் தெங்கு பனம் பொருள் கூட்டுத்தாபனத்தின் இணுவில் கிளை.

'ஊடுருவி'

## கொள்ளையடிக்கப்பட்ட பணம் ரூபா 97,000

(வவனியா)

வவனியாவிலுள்ள ராணி அரிசி ஆலையில் நடந்த கொள்ளையின்போது ரொக்கப் பணம் 97 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப் பட்டுள்ளது என்பது பொலிசாரின் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

கடந்த 30-ந் திகதி இரவு ஆயுதபாணியாக வந்த மூவரே இக்கொள்ளையினை நடத்தியுள்ளனர்.

கொள்ளையினை நடத்த வந்தவர்கள் சைக்கிளிலேயே வந்துள்ளனர். மூவரும் துணியினாலான தொப்பி அணிந்தினராம்.

சம்பவம் நடந்தபோது மேற்படி அரிசி ஆலையில் எட்டு ஊழியர்கள் [illegible] நின்றனராம்.

இந்த எட்டுப் பேரையும் றிவோல்வரைக் காட்டிப் பயமுறுத்தியே இக்கொள்ளையினை நடத்தியுள்ளனர்.

## இளைஞர்மீது கொள்ளையர் துப்பாக்கிப்பிரயோகம்

(வவனியா)

வவனியாவிலுள்ள பெரிய ஓோமரசம் குளம் என்ற கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 6 பேர் கொண்ட கோஷ்டியொன்று விவசாயிகளின் உழவு மாடுகளை கடத்திக் கொண்டிருந்த போது, இளைஞர் கோஷ்டியொன்று இவர்களைத் துரத்திய சமயம் அவர்கள் மீது கொள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்!

இச் சம்பவத்தினால் புஷ்பானந்தராஜா, ஆறுமுகம் ஆகிய இரு இளைஞர்களும் காயமடைந்து, வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது தேவசகாயம் என்ற இளைஞர் கத்திக்குத்துக்கிலக்காகி வவனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுதொடர்பாக வவனியா ஆசிக்குளம் கிராமசேவை அலுவலர் எஸ். பாலசுப்பிரமணியத்திடமும், வவனியா பொலிசிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கடல்படையிலும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கம் செய்யப்பட்டுள்ளனர்

இந்த ஏழுபேரும் கடற்படையில் புதிதாகச் சேர்ந்த வீரர்களை துன்புறுத்தினராம். இது சம்பந்தமாக இவர்கள் பலதடவைகள் சிரேஷ்ட்ட அதிகாரிகளா எச்சரிக்கை செய்யப்பட்டும் வந்தனராம்.

இதுபற்றித் தெரிவித்த கடற்படை பேச்சாளர் ஒருவர், 'ருகிங்'கைவிட வேறு ஒழுங்கீனமான நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டனர் என்று கூறியதுடன் விசாரணைகளின் பின்னரே இவர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டனர் என்று கூறினர்.

## லொறி கடத்தப்பட்டது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை மின்சார சபை லொறி ஒன்று கொள்ளையிடப்பட்டுள்ளது.

மின்சாரசபை லொறிச் சாரதி சின்னத்துரை அருமைத்துரை காங்கேசன்துறை பொலிசில் இதுசம்பந்தமாக புகார் செய்துள்ளார்.

மின்சார சபை ஊழியர்கள் பண்டத்தரிப்பில் மின்சார கோளாறை திருத்தச் சென்ற போது 3 இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் துப்பாக்கியுடன் வந்து இடைமறித்து லொறியைக் கொள்ளை அடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## எம். ஜி. ஆர். குணமடைகிறார்

(சென்னை)

ஆஸ்மா' நோயினால் பாதிக்கப்பட்டு சென்னை மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்படிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு, எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலை முன்னேறி வருகிறது என்று மருத்துவ அறிக்கை தெரிவிக்கின்றது.